1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

78-ம் புத்தகம் 5-ம் இல. யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு மாசி மாதம் 5-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## தேவாமுதம் அல்லது ஞானவாசிப்பு

(சென்றவாரத் தொடர்ச்சி)

யாக்கோபு என்பவர் ஒருநாள்கண்ட காட்சியொன்றில், பூமியிலிருந்து வானத்தையளாவின ஓர்ஏணியையும், அதில் சம்மனசுகள் ஏறிக்கொண்டும், இறங்கிக்கொண்டும் இருக்க அவ்வேணியின்உச்சியிற் சுவாமி வீற்றிருப்பதையும் கண்டார். அந்தஏணி பத்தியுள்ள சீவியத்தின் மெய்யானசாயலாம். அவ்வேணியின் இருகால்களில் ஒன்று தேவசிநேகத்தைக் கேட்கிறசெபத்துக்கும், மற்றொன்று அந்தத்தேவசிநேகத்தை அளிக்கிற தேவதிரவிய அனுமானங்களுக்கும் அடையாளமாம். அதன்படிகள் தேவசிநேகத்தின் பற்பல அந்தஸ்தாம். நாம் பிறருக்குதவியாக நற்கிருத்தியங்களைச் செய்வது மேற்சொல்லிய ஏணியினின்று இறங்குவது போலவும், நாம் உலகசிந்தனையை விட்டுத் தியானத்தால் சர்வேசுரனுடைய நேசஐக்கியத்தைத் தாவிப்போவது மேற்சொல்லிய ஏணியின் மேல் ஏறுவதுபோலவுமாகும். மேற்கண்ட ஏணியில் ஏறிக்கொண்டும், இறங்கிக்கொண்டும் இருப்பவர்களைக் கவனித்துப்பார். மனுஷரூபம் உள்ளவர்களாயினுஞ் சிறகுகளையுடையவர்களாம். இதற்குக்காரணம் இவர்கள் தியானமென்னுஞ்சிறகைப் புடைத்துப் பறந்து சுவாமியிடத்தில் நெருங்கியிருந்தபோதிலும் மனிதர்களோடு சஞ்சரித்து அவர்களோடு பிறர்சிநேகம் நிறைந்தவர்களாய்ப் புழங்கிவருகிறார்கள் என்பதேயாம். இவர்கள் முகங்கள் ஆனந்தஅக்களிப்புள்ளவை. அதேதெனில், உத்தமசமாதான சாந்தகுணத்தோடு சகலத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறார்களென்று அர்த்தமாம். இவர்கள் தலை, கை, கால் வெறுமையாய் இருக்கின்றன. ஏனெனில், இவர்கள் நினைப்பிலும், இச்சையிலும், கிரியையிலும் சர்வேசுரனுக்குப் பிரியப்படவேண்டுமென்ற கருத்தேயன்றி வேறில்லை. இவர்களுடைய ஆடை மெல்லிய தூயவஸ்திரமாம். ஏனெனில், இவர்கள் இவ்வுலகத்திற் சஞ்சரித்து உலககாரியங்களை உதவிக்கொண்டால் மகாபரிசுத்த இருதயத்தோடு தங்கள் அந்தஸ்துக்கு வேண்டியவரையில் மாத்திரம் உதவிக்கொள்ளுகிறார்களென்று அடையாளமாம். மெய்யானபக்தியுள்ளவர்கள் இவர்களுக்கு ஒப்பானவர்கள். பிரியசகோதரமே! மெய்யாகவே பக்தியானது வற்றாத இன்பச்சுனை. சகலபுண்ணியங்களிற் சிரேஷ்டபுண்ணியம். தேவசிநேகத்தின் உத்தமமாட்சிமை மகுடமாம். சிநேகமானது பாலுக்கொப்பாகவும், பக்தியானது பாலேட்டுக்கொப்பாகவும் இருக்கிறது. இன்னுஞ் சிநேகமானது ஓர் பூண்டு போலவும், பக்தியானது அதன்சுகந்த மலர்போலவும் இருக்கிறது. சிநேகமானது ஓர் வைரமணியானால், தேவசிநேகம் அதன் பிரகாச காந்தியாம். சிநேகத்தைப் பரிமள தைலத்துக்கு இணையிட்டால், பக்தியானது அதன் சுகந்தமணமாம். இந்தச்சுகந்தமணந்தான் மனிதர்களுக்குத் தைரியத்தையும், சம்மனசுகளுக்கு அகமகிழ்ச்சியையும் வருவிக்கின்றது.

ஆனால், பக்தியானது உண்மையான தேவநேசத்திற் தங்கியிருப்பதினால்— கிறீ. அனு. சொல்வதைக்கேள்.

2-ம் புத். 7-ம் அதி.

### சகலத்திலும்பார்க்க யேசுவை நேசிக்க வேண்டுமென்பதின் பேரில்

1. "யேசுநாதரை நேசிப்பதும், யேசுநாதரைப்பற்றித் தன்னைத்தானே வெறுப்பதும் என்னவென்று கண்டுபிடிக்கிறவன் பாக்கியவான்." இந்த நேசரைப்பற்றி மற்றெந்தநேசனையும் விட்டுவிடவேண்டியது; ஏனெனில், எல்லாவற்றையும்பார்க்க நேசிக்கப்பட யேசுநாதர் விரும்புகிறார். சிருட்டிகளின்நேசம் மோசமும், நிலையாமையுமுள்ளது. யேசுநாதருடைய நேசமோ உறுதியும், நிலையுமுள்ளது. சிருட்டிப்புகளின்பேரில் பற்றுதல் வைத்திருக்கிறவன், நிலைகொள்ளாத அவைகளின்மேல்ஊன்றித் தவறிவிடுவான். யேசுநாதர்மீதுபற்றுதல்வைத்திருக்கிறவனோ என்றைக்குந் தவறமாட்டான். உன்னைவிட்டு எல்லோரும் பிரிந்து போகையில் உன்னைக்கைவிடாதவரும், கடைசிமட்டும் நீ கெட்டுப்போகச் சகியாதவருமான அவரைநேசி; அவரை உன்நேசராக வைத்துக்கொண்டேயிரு; வேண்டும் வேண்டாம் என்றாலும் நீ ஒருநாள் எல்லாரையும் விட்டுப்பிரிய வேண்டியது.

2. சீவியகாலத்திலும், மரணத்தருவாயிலும் யேசுநாதரோடு ஐக்கியமாயிரு. எல்லாரும் உன்னைக்கைவிடும் போது உனக்கு ஒத்தாசைசெய்யக் கூடுமானவர் அவர் ஒருவரேயாகையால், அவருடைய பிரமாணத்துக்கு உன்னைக் கையளித்துவிடு. உன்நேசர் எத்தன்மை உள்ளவர் என்றால், வேறெவனையும் நீ நேசனாக ஏற்றுக்கொள்ள அவர் சம்மதிப்பதில்லை. தாம்மாத்திரம் உன் இருதயத்தை வசப்படுத்தி, அரசன் தன்னுடைய சொந்தசிம்மாசனத்தில் வீற்றிருப்பதுபோலத் தாமே உன்னிருதயத்தில் வீற்றிருக்க ஆசைப்படுகிறார். படைக்கப்பட்ட வஸ்துவின் பேரில் எவ்வித பற்றுதலுமறறவனுய் நீ இருப்பாயேயாகில் யேசுநாதர் உன்னிடத்தில் வாசஞ்செய்யப் பிரியங்கொள்ளுவார் என்பதுதிண்ணம். யேசுநாதரன்றி மனிதர்பேரில் நீ வைத்த நம்பிக்கையாவையும் ஏறக்குறைய வியர்த்தமாய்ப்போனதாகக் காண்பாய். காற்றால்அசைகிற நாணலைநம்பாதே. அதன்பேரில் ஊன்றிநில்லாதே. ஏனெனில், "எல்லாச்சீவனும் புல்லைப்போல் இருக்கின்றது. அதன்மகிமையாவும் புல்லின்பூவைப்போல் அழிந்துபோம்."



### சதா சகாய மாதாவின் கோணம்

"சுவாமி, இருபத்தைந்து வருடங்களாக நான் ஓர்பெருங்குடிகாரனாக இருந்தேன். 1951-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 29-ந்திகதி நான் மது அருந்தும் வேட்கைகொண்டு கொஞ்சக்காசும் எடுத்துக்கொண்டு காலை 9 மணிபோல வீட்டைவிட்டுப் புறப்பட்டேன். குடிப்பேயின் சலுகைஅன்று எனக்குத் தாராளமாகக் கிடைத்தது. நாள்முழுவதும் "முசுப்பாற்றி" பண்ணிவிட்டுப் பொழுதுபடும்வேளை வீட்டுக்குத்திரும்பினேன். ஆனால், மதுப்பிசாசு என்னைவிட்டபாடில்லை. எனவே, கிட்டவிருந்த தவறணையுட்புகுந்து ஒருபோத்தல் சாராயம் வாங்கிக்கொண்டு, வீடுபோய்ச்சேரும் நோக்கமாகப் பொஞ்சீன் வீதிவழியேசென்றுகொண்டிருந்தேன். திடீரென ஒரு எண்ணம் என்மனதிற் தோன்றவே, சந்தலூசியா ஆசனக்கோவிலின் மதிலருகே சாராயப்போத்தலை வைத்துவிட்டுக் கோவிலுக்குள் பிரவேசித்தேன். என்னைஅறியாமலே என்கால்கள் சதாசகாயமாதாவின்படம் இருந்த இடத்துக்கு என்னை இட்டுச்சென்றன. படத்தின்முன் வெறிமயக்கத்தில் முழந்தாளில்இருந்து "தாயே, இந்தக்குடிவெறிக்கூளியின் கூட்டுறவை முற்றாய் விட்டுவிடவா, அல்லது தொடர்ந்து அதற்குத் தூபங்காட்டவா?" என்று கேட்டேன்.

"குடியை விட்டுவிடு; அப்படிச் செய்தால் நீ வெற்றிபெறுவதற்கு ஒரு பெரியமுடி இருக்கிறது; அதை முற்றாய்விடு" என்றசொற்கள் என்காதுகளில் ஒலித்தன.

## நன்றியறிந்த தோத்திரங்கள்

நான் தேவதாயின் பாதத்தில்விழுந்து, அன்று தொட்டு என்மரணத்தருவாய்மட்டும் ஒருபோதும் மதுபானத்தைத் தேடுவதில்லையென்று அவவுக்கு வாக்குக்கொடுத்தேன்.

இந்தச்சத்தியவாக்குக் கொடுத்ததும், கோயிலைவிட்டு வெளிவந்து சாராயப்போத்தல் வைத்தஇடத்தைப் பார்த்தேன். போத்தல் வைத்தஇடத்திலேயே பத்திரமாகஇருந்தது. அதை எடுத்துக்கொண்டு இல்லஞ்சென்றேன். புரூப்பும், அச்சுமெழுகும் தொடப்படாமலிருக்க, போத்தல் வெறுமனே இருந்தது. சாராயம் மாயமாய் மறைந்தது.

25 வருடங்களாகக் குடியேதெய்வமெனக் காலங்கழித்த எனக்கு இது ஓர் புதுமையாகத் தோன்றினது. அன்றே குடியைவிட்டேன். வருடம் ஒன்று பூர்த்தியாகிவிட்டது. "தினவெறியன்" என்றபெயரும் போய்விட்டது. சதாசகாயமாதா ஸ்துதிக்கப்படுவாவாக!

சுவாமி, இது பொய்க்கலப்பற்ற உண்மைச் சம்பவமென உறுதியாய்க் கூறுகிறேன். சதாசகாயமாதாவின் பக்தர்கள் நன்மையடைந்துய்யத் தூண்டப்படுமாறு இதைப் பிரசுரிக்கும்படி விநயமாக வேண்டுகிறேன்.

இருளில் ஒளியாகவிளங்கிய பரிசுத்த இராக்கினியே வாழ்க! சதாசகாயமாதாவின்நாமம் புகழப்படுவதாக!"

* * *

ஒருவிதவையின்நன்றி. "கொழும்பிலிருந்து 36 மைலுக்கப்பாலுள்ள ஊரில்வசிக்கும் ஓர் ஏழைவிதவையாகிய எனக்கு ஒரேஒருமகன் இருந்தான். கடந்த ஆறுவருஷங்களாக அவனைக்காணாது அங்கலாய்த்தேன். தேடாதஇடமில்லை. அவனைத்தேடி நான் அடைந்த கஷ்டங்களுக்கோ அளவில்லை—ஊண், உடைமுதலியவற்றிற்கும், உறைவிடத்துக்குமாக யாசிக்கும்நிலைமையும் ஏற்பட்டது. அவனைத் தேடுவதையும் விட்டுவிட்டேன். சதாசகாயமாதாவின் நோவனைகளைப்பற்றிக் கேள்விப்பட்டு, மூன்று புதன்கிழமைகளுக்குமுன் அந்தப்பத்திமுயற்சியில் பங்குபற்றிக் காணமற்போனமகனைக் கண்டடைய உதவிசெய்யும்படி மாதாவைநோக்கி மன்றாடினேன். என்ன அதிசயம்! சென்றபுதன்கிழமை, நோவனைப்பத்திமுயற்சி முடிந்தபின் என் மகன் கோவிலில் இருக்கக்கண்டு ஆனந்தம்அடைந்தேன். தாயாருக்கு நன்றித்துதி செலுத்தினேன். சதாசகாயமாதா என்றும் புகழப்படுவாவாக."

3. மனிதனை அவனுடைய புறக்கோலத்தின்படியே மதிப்பாயாகில், வெகுசீக்கிரத்தில் மோசம்போவாய். ஆறுதலையும், இலாபத்தையும் பிறரிடத்தில்தேடினால் அநேகமாய் நஷ்டத்தைமட்டுங் காண்பான். சகலத்திலும் யேசுநாதரைத் தேடுகிறவன் அவரை எவ்விடங்களிலும்காண்பாய். தன்னைத் தானே தேடுகிறவனோ தன்னையுந்தான் காண்பான். ஆனால், அது தனக்குக் கேடாயிருக்கும். ஏனெனில், தான் யேசுநாதரைத் தேடாதிருப்பதால் உலகமுழுவதாலும், தன்னுடைய சத்துருக்களாலும் தனக்கு வரக்கூடுமான தின்மையைவிட, தானே தனக்கு அதிக தீங்கு வருவித்துக்கொள்ளுகிறான்.

கி. அ. 8-ம் அதி.

### யேசுநாதரோடு ஐக்கியமான சிநேகம்

1. யேசுநாதர் நம்முடன் இருக்கையில் எல்லாம் நன்மையாய் இருக்கிறது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# கோவைத் திருயாத்திரை

(முன்தொடர்ச்சி)

### அர்ச். கயித்தார் ஆலயம்

ஆசனக் கோவிலுக்கு முன்பக்கமாகச் சற்றுத்தூரத்தில் புராதனப் போன அர்ச். கயித்தார்கோவில் வானளாவிநிற்கின்றது. இதுவும் மிகப் பிரமாண்டமானது. முற்போது ஓர் பிரபல இந்துஆலயம் இருந்தஇடத்திலே இக்கோவில் கட்டப்பட்டிருக்கிறது. இது றோமாபுரியிலுள்ள அர்ச். பேதுருவானவரின் பசிலிக்காமகாலய அமைப்பாகக் கட்டப்பட்டிருக்கிறது. பலபலிபீடங்களும், மூடிக்களும்கொண்டது. இக்கோவிலுள் மரித்தமேற்றிராணிமார், வைஸ்றோய்கள் இவர்களின் உடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இக்கோவிலின்நடுவிலே ஆழமானகிணறுஒன்று இருக்கிறது. இக்கிணற்றுநீர் புனிததீர்த்தமாக மதிக்கப்படுகிறது. இக்கோவிலையடுத்து அர்ச். கயித்தாரின் கன்னியர்மடம் இருக்கிறது. இம்மடம் யாத்திரிகரின் தங்குசாவடியாக ஒதுக்கப்பட்டிருந்தது.

### அர்ச். மோனிக்கம்மாள் கன்னியர் ஆசிரமம்

பெண்களுக்கான அறநிலையங்களுள் மிகப்பிரதானமும், புராதனமுமானது இதுவே. இப்புராதன கட்டடத்தின் ஒருபகுதி அழிந்துகிடக்கின்றது. இந்த ஆசிரமத்தைப் பார்த்ததும் யாழ்ப்பாணத்தவர் பெருமையும், ஆனந்தமும் கொண்டனர். யாழ்ப்பாணத்தில் அரசு செலுத்திய ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசபரம்பரையைச்சேர்ந்த இராசகுமாரத்திகள்இருவர் யாழ்ப்பாணத்திலிருந்து கோவைசென்று மனந்திரும்பிக் கத்தோலிக்கவிரத்திகளாகி இந்த ஆசிரமத்திலேயே வசித்து வந்தனர். இவர்களில்ஒருவர் ஒருகால் இந்தமடத்தின் சிரேஷ்டதாயாராகவு மிருந்துவந்தார். இந்தச்சம்பவத்தை இந்தமடம் நினைவூட்டியது.

### அர்ச். சவேரியார் ஆலயமும் கிணறும்

அர்ச். சவேரியாரின் சீவியத்துடன் தொடர்புடைய இந்தஆலயமும், கிணறும் சரித்திரசம்பந்தமானவை. அர்ச். சவேரியார் இரவில் தனித்திருந்து, விழித்திருந்து தியானம்செய்து வந்த குன்றின்மேல் இச்சிற்றாலயம் கட்டப்பட்டிருக்கிறது. இக்கிணறு மிகஆழமானது. இக்கிணற்றுநீர் பக்தகோடிகளால் புனிதநீராகப் பாவிக்கப்பட்டு வருகிறது. இக்கிணற்றுநீரைப் பெற்றுக்கொள்வதற்குப் பக்தர்கள்குவிந்து விழுந்தடித்துச் சென்றுகொண்டிருக்கின்றனர். மேலும் அர்ச். அந்தோனியார்கோவில், அருளப்பர்கோவில், மலைமாதாகோவில், பேதுருவானவர்ஆலயம் முதலியகோவில்களையும் பார்த்து மகிழ்ந்தோம். அழிவுண்டு கிடக்கும் புதுமைச் சிலுவைக்கோவில், அர்ச். றோசாரியார் கோவில், கார்மேல் கோவில், அருளப்பர்மடம், அசிசிமடம் முதலிய புராதன கட்டடங்களையும் பார்த்து அக்களித்தோம். ஒருசிறிய சூழலில் அநேககோவில்களும் மடங்களும் நெருங்கியிருப்பதைப் பார்த்த எவரும் சமயப்பெருமிதம் அடையாமலிருப்பாரா?

### யாழ்ப்பாணத்துப் புதுமைமாதா சுரூபம்

இலங்கைமக்களுக்கு—விசேஷமாக யாழ்ப்பாணத்தவர்க்கு உரிமைப்பொருளாய் இன்றும்கோவையில் இருப்பது, யாழ்ப்பாணப் புதுமைமாதாசுரூபமாம். இச்சுரூபம் யாழ்ப்பாணக் கத்தோலிக்க சரித்திரத்தின் ஆஸ்பதமாயுள்ளது. எங்களுக்குக் கண்மணி போன்றது. போர்த்துக்கேயரின் ஆட்சிமுடிவுற்று ஒல்லாந்தரின்ஆட்சி ஆரம்பமானதும் இச்சுரூபம் யாழ்ப்பாணத்திலிருந்து கோவைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. மேற்கூறியஆலயங்கள் இருக்குமிடத்திற்கு இரண்டொருமைல் தூரமாகவுள்ள ஒருசிறியகோவிலில் எங்கள் புதுமைமாதா சுரூபம் பூச்சியமாக வைத்துக் காப்பாற்றப்பட்டுவருகிறது. இதுமிகப் பக்தியருட்சியானது. இச்சுரூபத்தைப் பார்த்ததும் எப்படியாவது இதனைமறுபடியும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச்செல்ல வேண்டுமென்னும்எண்ணம் மனதைப்பீறிட்டு ஓடிவந்தது. இச்சுரூபம் யாழ்ப்பாணத்துக்கு மீண்டும்கொண்டுவரப்படக் கத்தோலிக்கமக்க ளெல்லோரும் பெருமுயற்சிசெய்யவேண்டும். எங்கள்யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவரவர்கள் ஏலவே இதுவிஷயமாய் ஆரம்பமுயற்சிகள் எடுத்திருக்கிறார்களென அறிவது எங்களுக்கு வெகுஆறுதலும், அகமகிழ்வும் தருவதாகும். கடைசியாகக் கோவையிலுள்ள பிரதான அறநிலையங்களையெல்லாம் நாமெல்லோரும் பக்தியோடு பரபரப்பாய்ப் பார்வையிட்டு முடித்தோம்.

### இலங்கை மாதாவின் திருச்சுரூபம்

அன்று கோவை யாத்திரையின் மாறுதஞாபகமாய்—சரித்திர நிகழ்ச்சியாய் நடைபெற்றசம்பவம் இலங்கைமாதாவின் திருச்சுரூபத்தைக் கோவையில் வைத்துப் பெற்றுக்கொண்டதாகும். இந்தச் சுரூபம் இலங்கையிலுள்ள மாங்கொண்டு போர்த்துக்கால்தேயத்தில் பாத்திமாதாயின் சுரூபம்செய்த சிற்பியின்மேற்பார்வையில் செய்யப்பட்டது. பின்னர்றோமாபுரிக்கு எடுத்துச்செல்லப்பட்டுப் பாப்பாசரால் அங்கீகாரம்பெற்று ஆசீர்வதிக்கப்பட்டது. சவேரியாரின் திருவுடற்தரிசனை வைபவத்துக்குப் பாப்பாசரின்பிரதிநிதியாகச் சமுகமளித்த கருதினல்ஆண்டவருடன் கோவைக்குக் கொண்டுவரப்பட்டது.

அன்று சனிவாரம் சாயங்காலம் கொழும்பு அதிமேற்றிராணியார் தலைமையில் இலங்கையாத்திரிகர் அர்ச். பேதுருவானவர் ஆலயத்திற்கூடினர். அப்போது கருதினல்ஆண்டவர் சமயவைபவ ஆடம்பரத்துடன் லங்காமாதாவின் திருச்சுரூபத்தை அதிமேற்றிராணியாரிடம்ஒப்படைத்தார். அதைப் பெற்றதும் நாமெல்லாம் ஆனந்த அக்களிப்புமேலிட ஞானக் குதூகலம் அடைந்தோம். மாதாவைச் சுமந்து பவனிவந்தோம். இப்பவனியானது மற்றவர்களுக்குக் கண்கொள்ளாக் காட்சியாய்த் தென்பட்டது. பின்பு சுரூபம் சவேரியாரின் திருவுடலின்முன் வைக்கப்பட்டு வணக்கவழிபாடு நடத்தப்பட்டது. அதிமேற்றிராணியாண்டவரால் பிரசங்கஞ் செய்யப்பட்டது. பின்பு தாயாரின்சுரூபம் சுற்றுப்பிரகாரமாகத் துறைமுகங்கொண்டு சென்று மோட்டார்படகில் ஏற்றப்பட்டது. இடையறாத செபமாலைஓசை, கீதஓசை மத்தியிலே படகு கப்பலையடைந்தது. மாதாவின்வாழ்த்தொலி வானைப்பிளக்க அதுகப்பலில் ஏற்றப்பட்டது. அது கப்பலையடைந்ததும் கப்பல் ஒருஆலயமாக மாறியதுபோற் காட்சியளித்தது. சுரூபம் கப்பலின் ஆலய அறையில் வைக்கப்பட்டதும் எல்லோரும் இடைவிடாதுகூடி மாதாவை வாழ்த்திவணங்கினர்.

### யோசேவாஸ்முனீந்திரன் நிவாசதரிசனை

ஞாயிறுவாரத்தன்று கப்பலில் எல்லோரும் பூசைகண்டனர். பின்புபிரயாணிகள் மார்முகோவாஎன்ற துறைமுகத்தின் கரையில் இறக்கிவிடப்பட்டனர். பலரும் பலவழிகளாலும் சென்று பலஇடங்களையும் பார்வையிட்டனர். பெரும்பாலோர் இலங்கையின் அப்போஸ்தலரான யோசேவாஸ்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்.)

— G. J. பேனெடிக்ற் —

# சுதேச வர்த்தமானம்

### பேனெமேறென்ரி மேடல்

மொறட்டுவாவைச்சேர்ந்த கட்டுக்குருந்தையில்வசிப்பவரான திரு. ஏ. மோசேஸ் சில்வாஅவர்கள் திருச்சபைக்குச்செய்துள்ள பரோபகாரங்களைப்பாராட்டிப் பரிசுத்தபாப்பாசர் அவருக்கு "பேனெமெறென்ரி" எனும் மகிமைவிருது சங்மானித்திருக்கின்றார்.

### மாங்குளத்திலும் நீக்கப்பட்டது

மடுறோட்டிற்போலவே மாங்குளத்திலும் அமைக்கப்பட்டிருந்த நெல் ஏற்றுமதித் தடைநிலையம் நீக்கப்பட்டுவிட்டது. இத்தடைநிலையம் நீக்கப்பட்டுவிட்டதென மாங்குளத்தெருவால் யாழ்ப்பாணத்துக்குவரும் லொறிகள் மூலம்தெரியவருகிறது.

### லேடி இராமநாதன் காலமானர்

இலங்கையின் மாபெருந் தலைவர்களில் ஒருவராகவிளங்கியிருந்து காலஞ்சென்ற சேர் பொன்னம்பலம் இராமநாதன்அவர்களின் பாரியாரான லேடி இராமநாதன்அவர்கள் சென்ற சனிக்கிழமை பிற்பகல் சுன்னாகத்திலுள்ள "கல்லூரி மனை" என்ற இல்லத்தில் காலஞ்செல்லலாயினர். மரிக்கும்போது இவருக்குவயது 77. இவர் ஆஸ்திறேலியாவிலே அடெலெய்ட்நகரில் 1876-ம்ஆண்டு பிறந்தார். 1907-ம் ஆண்டு சேர் இராமநாதன்அவர்களை இவர் விவாகஞ்செய்துகொண்டார். இவரின் ஏகபுதல்வியான சிவகாமசுந்தரி தற்போது தபால்-தகவல்மந்திரியாராய் இருந்துவருகின்ற திரு. எஸ். நடேசன் அவர்களை விவாகஞ்செய்துள்ளார்.

### வாழ்க்கைப் புள்ளித் தொகை

இலங்கையிலே வாழ்க்கைச்செலவுப் புள்ளித்தொகை சென்ற தைமாசத்திலே முந்தியமார்கழியிலும் இரண்டு புள்ளிகளால் குறைந்துள்ளது. அதாவது 285-இல்இருந்து 283 ஆகியிருக்கிறது. இதற்குக்காரணம் மீன், மரக்கறி, புடவைஆதியன விலைகுறைந்தமையாம். அதனல் முந்தியஇருமாசங்களிலும் படிச்செலவாகத் 96 ரூபா 60 சதம் பெற்றவர்கள் தைமாசத்துக்குத் 94 ரூபா 30 சதம்பெறுவார்கள். இதனல் அரசினருக்கு நான்குலட்சம் ரூபாவரையில் மிச்சம் ஏற்படவிருக்கிறது.

### சில தேங்காய்களால்

மாத்தறையைச்சேர்ந்த கெபிலியப்போலா எனும்கிராமத்தில் சென்ற புதன்கிழமைகாலை கே. எம். டொன் நிக்கொலாஸ், எஸ். ஜே. தர்மசேன எனும் இருவருக்கும்பங்கான காணி ஒன்றில் சிலதேங்காய்களைத் தர்மசேனபிடுங்குவதை நிக்கொலாஸ்கண்டுவிட்டான். கண்டதே இருவருக்குமிடையில் வாக்குவாதம்எழுந்தது. அதன்விளைவாய்த் தர்மசேன ஒருகத்தியை இழுத்தெடுத்து நிக்கொலாஸைப் பலதரம்குற்றிவிட்டுத் தலைமைக்காரனிடஞ்சென்று அவன் தன்னைக்குற்றியதாக முறையீடுபண்ணினனென்று சொல்லப்படுகிறது. குற்றுண்ட நிக்கொலாஸ் படுகாயமடைந்து மாத்தறை ஆஸ்பத்திரியில் அன்றுதானே மரணமடைந்தான்.

### விஷபேதி நோய்

யாழ்ப்பாணக்குடா நாட்டிலே யாழ்ப்பாணநகர், புத்தூர், புலோலி, வளலாய் முதலாம் ஐந்துஇடங்களில் தலைகாட்டிய கலராஎனப்படும் விஷபேதியால் இதுவரை 12 பேர் இறந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதனல் சுகாதார பிரதம வைத்திய அதிகாரியான டக்றர் நோயெல் கெலாட்அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுவந்து நோய்பரவாதிருப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

### தீவுப்பகுதியும் வெங்காயமும்

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஊர்காவற்றுறை, காரைநகர், புங்குடுதீவு, நயினாதீவுமுதலாம் தீவுகளிலே சென்ற கார்த்திகை, மார்கழி மாதங்களில் செய்கைபண்ணிய வெங்காயம் தற்போது அறுவடையாகிவருகிறது. அங்கே இம்முறை அறுவடையாகும் வெங்காயம் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதக்கும் தேவைப்படும் விதை வெங்காயத்தைஉதவப் போதுமானதென்று உணவுஉற்பத்தித்தலைவர் தெரிவித்திருக்கின்றார். வழமையிலே வருடம்ஒன்றுக்கு ஆயிரம்தொன் விதை வெங்காயம்வரையில் இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்படுகிறது. ஆனல், இம்முறை தீவுப்பகுதிக் கமக்காரரின் வெங்காயசெய்கைமுயற்சியால் ஐந்துலட்சம்ரூபாவரையில் இலங்கையிலிருந்து வெளிநாடுசெல்லாது பாதுகாக்கப்பட்டுள்ளது.

### மகுடாபிஷேக ஒலிபரப்பு

வருகிறஆனிமாதம் 2-ந் திகதியன்று எலிசபேத்மகாராணியாரின் மகுடாபிஷேக ஊர்வலம்பற்றியசெய்தியை இலங்கையில் நேரேதமிழில் கேட்கத்தக்கதாய் அங்கிருந்து அது வானொலி மூலம் தமிழில்ஒலிபரப்பப்படவிருக்கிறது. கொழும்பு, சஞ்சூசையப்பர் கல்லூரிமாணவரான திரு. கே. சண்முகநாதன் அதனைத்தமிழில் ஒலிபரப்புவதற்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார். ஊர்வலபாதையில் இவருக்கு ஓர்விசேஷஆசனம் வழங்கப்படும். மகுடாபிஷேக லண்டன்காட்சி, வெஸ்ற்மினிஸ்றர்ஆலய வெளிக்காட்சி, பிரித்தானியமக்களின் கொண்டாட்டங்கள் ஆதியனபற்றிய செய்திகளும் மகுடாபிஷேகவாரத்திலே தமிழில் ஒலிபரப்பப்படவிருக்கின்றன.

### இரணைமடுத் திட்டவேலை

இரணைமடு நீர்ப்பாசனத் திட்டவேலை சமீபத்திலே ஆரம்பமாகியிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் வருகிற புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் 286 கமக்காரர்குடும்பங்களைக் குடியேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. முழுத்திட்டமும் பூர்த்தியானதும் பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளில் 2,500 ஏக்கர்நிலம் நெற்செய்கைக்குள்ளாகும். அத்துடன் 1,000 ஏக்கர் மேட்டுநிலமும் கமச்செய்கைக்குள்ளாகும். அன்றியும் முரசுமோட்டைப் பகுதியிலுள்ள 2,500 ஏக்கர்நெல்வயல்களுக்கும் நீர்ப்பாசனவசதிகிடைக்கும். இவற்றிற்கென இரணைமடுக்குளத்தின் அணைக்கட்டை மேலும் ஏழுஅடிவரை உயர்த்தித் தண்ணீர்மட்டம் அதிகரிக்கச்செய்யப்படும். இதற்குமாத்திரம் அரசாங்கத்துக்கு 20 லட்சம் ரூபாவுக்குமேல் செலவேற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

### குரங்குகளுக்குப் புலிவேஷம்

ஊவாமாகாணத்திலே வெள்ளாவைப்பகுதியில் உணவுப்பொருட்செய்கை நடைபெறும் காணிகளில் குரங்குகள்புகுந்து குரக்கன், தோடை, மரக்கறி, மற்றும்தானியவகைகளைப் பரிநாசஞ்செய்துவருவதாலே அவைகளை அப்புறப்படுத்துதற்கென இதுவரை கையாடிய உபாயங்களெல்லாம் பயன்தாராமற் போய்விட்டன. அதனல் இப்போது சிலகுரங்குகளைப்பிடித்து, அவற்றிற்குப் புலித்தோல்களைப் போட்டு வேடம்மாற்றி அந்தக்காணிகளுக்கு அருகாமையிலுள்ளகாடுகளில் அவைகள் உலாவித்திரிய விடப்படவிருக்கின்றன. இந்தஉபாயத்தாலே புலிவேடம்பூண்ட குரங்குகளைக்கண்டதும் புலிகளெனநினைந்து ஏனையகுரங்குகள் பயப்பிராந்திகொண்டு அப்பால் ஓடிப்போய்விடுமாம். இந்தஉபாயம் இந்தியாவிலே நல்லபலன் அளித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### சூசையப்பருக்குத் தேவாரம் பாடிய

# புதுவைச் சவராயலு நாயகர்

சொல்லின் செல்வர்
ரா. பி. சேதுப்பிள்ளை
சென்னைப் பல்கலைக் கழகத்
தமிழ்ப்பேராசிரியர்

புதுச்சேரி என்று வழங்கும் புதுவைமாநகரில் பலதமிழ் அறிஞரும், செல்வரும்தோன்றினர். வாணிகத்தால் செழிப்புற்ற அம்மாநகரில் தமிழ்ப் புலமையும் வளமுறவளர்ந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அந்நகரில் வாழ்ந்த நாயகர்ஒருவர் கல்விகேள்விகளிற் சிறந்துவிளங்கினர். சவராயலு நாயகர்என்பது அவர்பெயர். கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்த சவராயலுநாயகர் கருவிலே திருவுடையார். கவிபாடும் திறனுடையார்.

அக்காலத்தில் தன்னிகரில்லாத் தமிழ்ப்புலவராய் விளங்கினர் திரிசிரபுரம், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை. அப்புலவர்பெருமான் சிறந்தநூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், போதகாசிரியராகவும் திகழ்ந்தார். அவரிடம் தமிழ்க்கல்வி கற்ற மாணவர்பலர். இத்தகைய பெருமைவாய்ந்த மகாவித்துவானைத் தம்ஆசிரியராகப் பெற்றார் சவராயலு நாயகர். பிள்ளையவர்களிடம் அவர் பாடங்கேட்ட முறையினைக் கூறுகின்றார், மகாமகோபாத்யாய டக்டர் உ. வே. சாமிநாதையர்:—

"புதுச்சேரியில் இயன்றவரையில் தமிழ்ப் பாடங்களைக் கற்றுப் பாடப் படிக்கப் பிரசங்கிக்க ஒருவாறு பயிற்சியுற்றிருந்த செ. சவராயலு நாயகரென்னும் கிறித்தவர் இவர். படிப்பிக்கும் கலத்தைக்கேள்வியுற்றுத் திரிசிபுரம்வந்து தியாகராச செட்டியார்முதலியோர் முகமாகக் கையுறைகளுடன் இவரைக்கண்டு, வீரமாமுனிவரெனும் புனைபெயர்கொண்ட பெஸ்கி சுவாமியாரால் செய்யப்பெற்ற தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம் முதலியனவாய தங்கள் சமயநூல்களைப் பாடஞ் சொல்ல வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். அதற்கிசைந்த இவர் அவரைப் பரீட்சித்து அவருடைய தமிழ்க்கல்வியின் நிலையைஅறிந்து சில கருவிநூல்களை முதலில்பாடஞ் சொல்லிவிட்டுப் பின்னர் அவர் விரும்பியவண்ணம் தேம்பாவணி முதலியவற்றிற்குப் பொருள்கூறித் தமிழில் நல்லபயிற்சியை உண்டாக்கி அனுப்பினர். அதன்பின்பு சவராயலு நாயகருக்குக் கிறித்துவர் குழாங்களில் உண்டான மதிப்பும், பெருமையும் அதிகம். பிள்ளையவர்கள் தேகவியோகம் அடையும்வரையும் இவரிடத்தும், இவர் மாணுக்கர்களிடத்தும் அவர் காட்டிவந்த அன்பும், செய்தஉதவிகளும் மிகஉண்டு. இவரிடத்தில் தாம் பாடங்கேட்டதை மறவாமல் தம்முடைய கல்விஉயர்ச்சிக்குக் காரணம் இவரேயென்னும் எண்ணம் அவர்பால் என்றும் இருந்துவந்தது"

கிறித்துவ உலகத்தில் தேம்பாவணியின் நயங்களை விரித்துரைத்துப் பெருமதிப்புப் பெற்றார் நாயகர். அம்மதிப்பிற்கெல்லாம் காரணமாயிருந்த மகாவித்துவானை மனமாரப்போற்றிப் பாடியுள்ளார்.

சவராயலுநாயகரின் புகழுக்குச் சாதனமாக இருந்தகாவியம் தேம்பாவணியாதலால் அதன் அருமைபெருமைகளை அறிந்துகொள்ளுதல் அவசியமாகும். ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்குமுன்னே இத்தாலிய தேசத்திலிருந்து தமிழ்நாட்டிற்குச் யேசுபணி செய்வதற்காகவந்தார் ஒருவித்தகர். அந்நியநாட்டினர் என்றஉணர்ச்சி அணுவளவுமின்றி அவர் தமிழ்மக்களோடு கலந்துவாழ்ந்தார். ஏட்டுச் சுவடிகளிலிருந்த தமிழ் இலக்கியங்களையெல்லாம் வருந்திக்கற்றார். மேலான தமிழ்ப்புலமையுற்றார். தமிழ்நாடே அவர் தாயகமாயிற்று. "பெஸ்கி" என்னும் அவர் இயற்பெயரும் வீரமாமுனிவர்என்று மாறிற்று. தைரியநாதசுவாமி என்றும் அவரைச் சொல்வதுண்டு. தமிழ்மொழியில் திருத்தக்கதேவர்செய்த "சிந்தாமணி" போலவும், கம்பர் இயற்றிய இராமாயணம் போலவும் கிறித்துமதச்சார்பாகப் பெரியதொரு காவியம்செய்ய ஆசைப்பட்டார் வீரமாமுனிவர். அவ் ஆசையின்பயனாக எழுந்ததுதேம்பாவணிக்காவியம். "உலகுய்ய அவதரித்த யேசுநாதரைக் கைத்தாதையாக வளர்த்த சூசையப்பரை"க் கதாநாயகனாக்கொண்டது தேம்பாவணிக்காவியம். பழையதமிழ் இலக்கியங்களின் நயங்களையெல்லாம் வீரமாமுனிவர் அக்காவியத்திலே வடித்தெடுத்து வைத்துள்ளார் என்று தமிழறிந்தோர் கூறுவர். தெய்வப்புலமைத் திருவள்ளுவர்செய்த "திருக்குறளி"ன் கருத்துக்களும், செந்தமிழ்ச் செல்வராகிய இளங்கோமுனிவர்செய்த "சிலப்பதிகாரத்தி"ன் செழுமையும், சமணமுனிவராகிய திருத்தக்கதேவர் இயற்றிய சிந்தாமணியின்சொல்லோவியமும், கவியரசராகிய கம்பர்செய்த காவியத்தின் கவிநலமும், இன்னோன்னபல நயங்களும் அமைந்து விளங்குவது தேம்பாவணி. அந்நூலை ஓதிஉணர்வதற்கும், பிறர்க்குஉரைப்பதற்கும் நிரம்பிய தமிழ்ப்புலமை வேண்டும் என்பது சொல்லாமலே அமையும். இத்தகைய புலமையைத் தம்ஆசிரியரான மீனாட்சி சுந்தரனார் அருளால் எளிதிற்பெற்ற நாயகர் அவர்செய்த ஞானதானத்தின் பெருமையை மனமாரப்போற்றினார்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சைவசமயத்தில் சிறந்தபற்றுடையவர். சைவமடங்களுள் சாலச் சிறந்த "திருவாவடுதுறை" ஆதீனத்தைச்சேர்ந்த புலவர் சிகாமணி. ஆயினும் சாதி, மத, வேற்றுமையின்றித் தமிழார்வமுடைய மாணவர்க்கெல்லாம் கைமமாறுகருதாது தமிழறிவுறுத்திய பெருமை அவருக்கு உரியதாகும். சவராயலுவைப்போலவே சவேரிநாத பிள்ளையென்ற மற்றொரு கிறித்துவரும் மாணவராயிருந்தாரென்று தெரிகின்றது. கிறித்துமதச்சார்பான நூல்களைப் பாடம்சொல்லும்பொழுது தாம் சைவர்என்ற உணர்ச்சி சிறிதுமின்றி, எடுத்தநூலின் கருத்திலே ஈடுபட்டு உணர்ச்சியோடு அதன்நயங்களைப் பிள்ளையவர்கள் எடுத்துரைப்பாரென்று அவர் சரித்திரம்கூறுகின்றது.

கிறிஸ்துமதச்சார்பாக எழுந்தநூல்களைப் பிள்ளையவர்கள் படித்தலும் பாடஞ்சொல்லுதலும் தகுதியல்ல என்று குறைகூறத் தலைப்பட்டார்சிலர். அப்போது அவர்கூறிய அறிவுரை சிறந்த தமிழ்ப்புலவர்களின் பரந்த மனப்பான்மையைக் காட்டுவதாகும். "நான் தேம்பாவணியைப் பாடஞ் சொல்லுதலும் கிறித்தவர் முதலிய பிறமத மாணுக்கர்கள் என்பாற் பாடங் கேட்டலும்கூடாத செயல்களென்று சிலர் சொல்லிவருவதாகத் தெரிகிறது. மாணுக்காரக யார் வந்தாலும் அன்போடு பாடஞ்சொல்லுதலையே எனது முதற்கடமையாக எண்ணியிருக்கிறேன். எல்லாத்தானத்திலும் வித்தியாதானமேசிறந்தது. அன்னமிடுவதற்குப் பசியுள்ளவரே பாத்திரர். அதேபோலப் பாடஞ்சொல்லுவதற்கு, படிப்பில் ஆர்வமுடையயாவரும் பாத்திரர்களே. அன்றியும் தமிழ்நூல் யாதாயிருப்பினும் அதிலுள்ள சொற்பொருள் நயங்களைஉணர்தல் பிழையாகாதே! கிறித்துவமதத்தைப் பிரசாஞ்செய்ய வேண்டுமென்பது என்னுடைய கருத்தன்று. தமிழ்நூல் என்னும் முறையில்யாதும் விலக்கப்படுவது அன்று" என்று கூறினர்அவர்.

(தொடரும்)

பருத்தித்துறை - தும்பளை

# பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள்

மாசிமாதம் 11-ந் திகதி

இத்திருநாளுக்கு ஆயத்தமாக மாசிமாதம் 1-ந் திகதி சாயந்தரம் 6 மணிக்கு நோவனைகள் தொடங்கும்.

நிகழ்ச்சிகள்:—

[1] மாசிமாதம் 10-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 6 மணிக்கு மெழுகுவர்த்தித் தீபஅலங்காரச் சுற்றுப் பிரகாரம்.

[2] பிற்பகல் 7 மணிக்குப் பிரசங்கம்.

[3] பிற்பகல் 7-30 மணிக்கு மகாவந். மேற்றிராணி ஆண்டவர்அவர்களால் வேஸ்பர் ஆராதனை — தேவநற்கருணை ஆசீர்வாதம்.

[4] 11-ந் திகதி காலை 7 மணிக்குப் பாடற்பூசை.

☞ திருக்கேபியில் யாத்திரிகட்கேற்ற சகல வசதிகளுமுண்டு.
மகாவந். மேற்றிராணியாண்டவர் சமுகமளிப்பார்.

கட்டளைக்குரவர்

## மாதகல்துறை
## பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள்

இவ்வருஷம் பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள் மாசிமாதம் 2-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் 15-ந்திகதி காலை அதிசிறப்பாக முடிவாகும்.

14-ந் திகதிசாயந்தரம் 7 மணியளவில் பரிசுத்த லூர்துநாயகியின் திருச்சுரூபம் சென் தோமஸ் ஆலயத்திலிருந்து ஆடம்பரவைபவங்களுடன் மெழுகுவர்த்தித் தீபஅலங்கார சுற்றுப்பிரகாரமாகத் திருக்கெபிசெல்ல, அங்கே மகாவந். மேற்றிராணியாண்டவரவர்களால் வேஸ்பரென்னும் மாலையாராதனை பாடப்பெற்றுச் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்படும்.

[யாத்திரிகட்கேற்ற சகல வசதிகளுமுண்டு.]

கட்டளைக்குரவர், மாதகல்.

## எனது கோவை யாத்திரை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தோம். அவர் தமதுசத்துராதிகள் கையில் அகப்படாமல் ஒளித்திருக்கும்படி புதுமையாய்உண்டான குகைக்குச்சென்று அதனுள் பிரவேசித்து அதையும் கண்குளிரக் கண்டோம். பின்னர் அவ்விடமிருந்த பெரியமலைக்குச் சென்றோம். அங்கே அவர்மாணித்த இடமென்று சொல்லப்படும் இடத்தில் கட்டப்பட்டிருக்கும் கோவிலையும், (அவர் மாணிக்கையில் சிந்திய இரத்தத்தின் ஒருதுளிபட்ட கல்ஒன்று இன்றுவரையில் பாதுகாக்கப்படுகிறது.) அங்கு பீடத்தின்மேல் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த அக்கல்லையும் தரிசித்தோம். அந்தஇரத்தத்தைத் தொடவும், முத்திசெய்யவும் எனக்கு உத்தரவு கிடைத்தமையால் நான் பீடத்தின்மேல்ஏறி அதைத் தொட்டு முத்திசெய்தபின் அங்கு நின்றவர்களுக்கெல்லாம தொட்டுக் கொடுத்தேன். பிற்பாடு பன்னிருஅப்போஸ்தலர்களின் படங்களையும் தரிசித்துக்கொண்டு ஏறக்குறைய 135 படிகளைக்கொண்ட அந்த மலையிலிருந்து இறங்கிச் சென்தோமஸ் மவுன்ட் என்னும் ஊரில், அவர்கல்லறை இருப்பதாக அறியவந்தமையால் அவ்விடஞ் சென்றோம். அந்தக்கல்லறைக்குமேல் பிரமாண்டமான ஓர்மேற்றிராசன ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. நடுப்பீடத்தின்முன் நிலஅறைக்குப்போகும் படிகள்இருக்கின்றன. இந்தப்படிகளால் இறங்கிக் கீழேபோனோம். அங்கும் ஓர்பீடம் இருக்கிறது. இந்தப்பீடத்தின்கீழ்தான் கல்லறை இருக்கிறது. இக்கல்லறைமேல் உள்ள மண்ணில் கொஞ்சம்எடுத்துக்கொண்டு மடத்துக்குத்திரும்பினோம்.

அடுத்தநாள் 19-ந் திகதி இன்னும் பல்இடங்களையும் சுற்றிப்பார்த்தோம். பின்னர் அன்றுமாலை 6 மணியளவில் புகையிரத ஸ்தானஞ்சென்று எங்கள் மறு பயணத்தைத் தொடக்கி 20-ந் திகதி காலை 5 மணியளவில் திருச்சிக்கு வந்து அன்றுபகல்முழுதும் அந்தப்பட்டணத்தையும், சிறீரங்கம் என்னும் ஊரையும் சுற்றிப்பார்த்தோம். 21-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை அர்ச். சூசையப்பர் அச்சகக் கோயில் சென்று பூசைகண்டுதிவ்வியநற்கருணை பெற்றுக்கொண்டு எங்கள்விடுதிக்குச் சென்று காலைப்போசனம் முடிந்ததும் திருச்சி ஆகாயவிமான நிலையஞ் சென்றோம். அங்குபரிசோதனைகள் நடந்தபின் ஏறக்குறையப் 11-15 மணிக்கு விமானத்தில்ஏறி 45 நிமிஷநேரம் பிரயாணஞ்செய்து பலாலிவிமானநிலையத்தில்இறங்கி ஏறக்குறைய 2 மணியளவில் யாழ்ப்பாணத்தை அடைந்து சாயந்தரம் மிருசுவிலைச் சேர்ந்தோம்.

எங்கள்யாத்திரை சேமமாய்இனிதே நடந்துமுடிய அருள்புரிந்த அர்ச். சவேரியாரின் நாமம் எங்கும்புகழப்படுவதாக.

## திருநாள் அட்டவணை

மாசிமாதம் — 1953

| | | | |
|---|---|---|---|
| வெ | 6 | அ. தீத்தூசப்பர், மே. | (வெ) |
| சனி | 7 | அ. ரொமுவால்தர், ம. | (வெ) |
| ஞா | 8 | சடிகை ஞாயிறு — அ. மாத்த அருளப்பர், து. | (ஊ) |
| திங் | 9 | அ. அலெக்சாந்திரி சிறிலப்பர், மே. வே. | (வெ) |
| செ | 10 | அ. ஸ்கொலாஸ்திக்கம்மாள், க. | (வெ) |
| புத | 11 | தேவதாயார் லூர்துபதியில் தரிசனமானதிருநாள் | (வெ) |
| வி | 12 | அ. எவுலாலியம்மாள், க. வே. | (வெ) |

சத்தியவேத

# பாதுகாவலன்

1953-ம் ஆண்டு
மாசிமாதம் 5-ந் திகதி

## சுதந்திரப் பெருநாள்

நமது செல்வநாடாகிய ஸ்ரீ லங்கா அருந்தவமிருந்து ஈட்டிய சுதந்திரத்தின் ஐந்தாம் ஆண்டு பூர்த்தியாகி ஆறாவது ஆண்டு உதயமாகியிருக்கிறது. இந்தச் சுதந்திரப்பெருநாளை மக்கள் அனைவரும் நேற்றைத் தினம் மங்கலகரமாகக் கொண்டாடினார்கள். ஒருநாடு சுதந்திரமடைந்தால் அங்கு நடைபெறுவது மக்களின் சுதந்திர ஆட்சி. அதாவது பொதுமக்களின் சனநாயக ஆட்சியாகும். இன்று உலகிலுள்ள ஏனைய சுதந்திர நாடுகளில் நமது ஸ்ரீ லங்காவும் ஒன்றாய் இருந்தபோதிலும் நாம் இப்போது அனுபவிப்பது அரசியற் சுதந்திரமே. மற்றும் பொருளாதார சுதந்திரத்தை நாம் இன்னும் அனுபவிப்போராயில்லை. நாம் உயிர்வாழ்தற்கு இன்றியமையாத உணவு, உடை ஆதியவற்றில் பிறநாடுகளிலே தங்கியிராது, அவற்றின் கையைப்பாராது, இவைகள் சம்பந்தமாய் நம்மிலே நாம் தங்கியிருக்குமிடத்து — நமதுசுயதேவைகளை நமது நாட்டிலேயே பூர்த்தி செய்யுமிடத்துத் தான் பொருளாதார சுதந்திரத்தை நாம் அனுபவிப்பவர்களாவோம்.

நாம் சுதந்திரமடைந்தபோது வருடந்தோறும் நமக்குத்தேவையான உணவுப் பொருட்களில் 77 சதவிகிதமும் பிறநாடுகளிலிருந்து இறக்குமதி யாயிற்று. ஆனால், சுதந்திரமடைந்தபின் அரசாங்கம் செய்துவந்திருக்கின்ற பல்வேறு திட்டங்களின் பயனாக இப்போது 55 சதவிகிதமே இறக்குமதியாகிறது. இன்னும்விரிவாகக்கூறுமிடத்து, நமக்குத்தேவைப்படும் அரிசியில் 45 சதவிகிதம் அதாவது 3,17,000 தொன் அரிசி எமது நாட்டிலேயே உற்பத்தியாக, அதனால் நமது சுயதேவையைப் பூர்த்தி செய்ய இன்னும் 55 சதவிகித அரிசி அதாவது 4,00,000 தொன் அரிசிக்குப் பிறநாடுகளையே எதிர்பார்த்திருக்கின்றோம். இதற்குச் செய்யவேண்டியதென்ன? நமதுநாட்டிலே தற்போது ஏக்கர்ஒன்றுக்கு 23 புசல் வீதம் விளைந்துகொண்டிருக்கும் நெல்லை அரசாங்கத்துடன் ஒத்துழைத்து நவீன முறைகளைக்கையாண்டு 70 புசல் வீதம் விளையச்செய்வதேயாம். இன்னும் பிரதமர் அவர்கள் தமது சுதந்திரத்தின வேண்டுகோளில் கேட்டுக்கொண்டபடி, அரிசிக்குப்பதிலாக மாற்றுணவுப்பொருட்களைச் சாப்பிடுவதும் அவசியமாகும்.

நிற்க, அமெரிக்க புதியஜனாதிபதியாகிய ஜெனறல் ஐஸனோவர் அவர்கள் கோரிய யுத்தத்தை எவ்விதத்திலும் தீவிரமாக முடித்துவிடமுயன்று, தென்சீனாவைத்தாக்குவதற்குப் போர்மோசாதீவிலுள்ள சியாங்-கை-ஷெக்அவர்களின் தேசியசீனப் படைகளுக்கு எவ்விததடையும் ஏற்படாவண்ணம் இதுவரை அங்கு இடையிலேநிறுத்திவைத்திருந்த ஏழாவதுஅமெரிக்ககடற்படையை வெளியேற்றிவிட்டிருக்கின்றார். அதனால் செஞ்சீனாவும், தேசியசீனாவும் உள்நாட்டுயுத்தம்ஒன்றில் இறங்குமிடத்து — செஞ்சீனாவுக்குள் யுத்தசாமான்கள் பிரவேசிப்பதைத்தடுக்கும் ஓர்நடவடிக்கையாகச் செஞ்சீனாவையடுத்துள்ள கடல்களை அமெரிக்ககடற்படை முற்றுகையிட முன்வருமிடத்து எமதுநாட்டுக்குச் சீனாவிலிருந்து அரிசி வருவது தடைப்பட்டுப் பேராபத்து ஏற்படலாம். அமெரிக்கஜனாதிபதியின் நடவடிக்கைகளால்சோவியற்ருஷிய—செஞ்சீன பாதுகாப்புஉடன்படிக்கை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு, மற்றுமோர் மகாயுத்தம் நிகழுமோவென அஞ்சப்படுவதால், அப்போதும் வர்த்தகஆபத்துஏற்பட்டு நமது முக்கிய சீவாதார உணவுப்பொருளாகிய அரிசிவரத்துத் தடைப்படலாம். ஆதலால் நாம் எடுத்துக்கூறியவைகளை மக்கள் அனைவரும் தீர்க்காலோசனை செய்து எந்தஆபத்தையும் சமாளிக்கத்தக்கதாய்த் தகுந்த ஆயத்தஞ்செய்துவரத் தாமதமின்றியே முயற்சியெடுக்க வேண்டும்.

கடைசியாக, நாம்பெற்றுள்ள சுதந்திரத்தைப்பாதித்துப் பங்கப்படுத்தக் கூடியவைகள்மட்டிலே பொதுமக்கள் விழிப்பாய் இருந்துவரவேண்டும். கம்யூனிஸ்த—சமசமாஜ — பொதுவுடைமைக்கட்சிகள் சென்ற பொதுத்தேர்தலிலே தோல்வியடைந்தபோதிலும், அவைகள் இன்னுமே நிலைபெற்றிருப்பதாலும், சிறுபான்மைச் சாகியத்தாருக்குப் பாதகமாகப் பௌத்த சிங்கள சனத்தலைவர்களுள் ஒருபாலார் எமதுநாடு அடைந்த சுதந்திரம் தமதென்றாற்போல் தமதுசமயமே அரசாங்கசமயமாய், தமதுபாஷையே அரசாங்கபாஷையாய் இருக்க வேண்டுமெனக் குரலையிடுவதாலும், இன்னும்சிலகாரணங்களாலும் சுதந்திரத்துக்குத் துரோகமாய் நடந்துகொண்டுவருவது நிறுத்தப்படவேண்டும். மேலும் ஸ்ரீலங்காவின் சுதந்திரப்பெருநாளன்றே லங்காமாதாவின் பெருநாளுமாகும். ஆதலால் அத்திருநாயகி எமது நாட்டினைக் கிருபாகடாட்சமாக நோக்கி, இங்கே உண்மைச் சுதந்திர அரசு — நீதியும் சமாதானமும்தேங்கிய உண்மைச் சனநாயகஅரசு நிலைபெற்றிருக்கவும், பஞ்சம், படைஆதியவற்றிலிருந்து நம்மைப்பாதுகாக்கவும் தயைபாலிப்பாராக.

தபசுகாலத்துக்கு முன்வரும்

## 2-ம் ஞாயிறு

(சடிகை ஞாயிறு)

சுவிசேஷ வாசிப்பு

(லூக். 8: 4—15)

அர்ச். லூக்கா எழுதிவைத்தபடி பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி:- அந்தக் காலத்திலே ஏராளமான சனங்கள் கூடி, பட்டணங்களிலிருந்து அவரிடத்தில் தீவிரித்துவரவே, அவர் உவமையாகச் சொன்னதாவது: விதைக்கிறவன் ஒருவன் தன்விதையை விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கிறபோது சிலவிதை பாதையோரத்தில் விழுந்து மிதிபட்டது; ஆகாயத்துப் பறவைகள் அதைப் பட்சித்துப்போட்டன. சிலது கற்பாறையின் மேல் விழுந்து முளைத்தது; ஆயினும், அதற்கு ஈரமில்லாததினாலே காய்ந்துபோயிற்று. வேறுசிலது முள்ளுகள்நடுவில் விழுந்தது; ஆனால், முள்ளுகளும்கூடஎழும்பி அதை அமுக்கிப்போட்டன. வேறுசிலது நல்ல நிலத்தில் விழுந்தது; அதுமுளைத்து நூறுமடங்காகப் பலனைத் தந்தது என்றார். இவைகளைச்சொல்லி: கேட்கச் செவியுள்ளவன் கேட்கக் கடவானென்று உரக்கக் கூறினார். அப்போது அவருடைய சீஷர்கள் இந்தஉவமையின் கருத்து என்னவென்று அவரை வினவினார்கள். அவர்களுக்கு அவர் திருவுளம்பற்றினதாவது: சருவேசுரனுடைய இராச்சியத்தின் இரகசியங்களை அறிந்துகொள்ள உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கோ, அவர்கள்கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, அவைகள் உவமைகளாகச் சொல்லப்படுகின்றன. இந்த உவமையின் கருத்தாவதெனில்: விதை சருவேசுரனுடைய வாக்கியம்; பாதையோரத்தில் விதைக்கப்பெற்றவர்கள், வாக்கியத்தைக்கேட்கிறவர்களாம். பின்பு, அவர்கள் விசுவசித்து இரட்சணியம் அடையாதபடிக்குப் பிசாசு வந்து அவர்களுடைய இருதயத்தினின்று வாக்கியத்தைப் பறித்துக்கொள்ளுகிறது. கற்பாறையின்மேல் விதைக்கப்பெற்றவர்கள், வாக்கியத்தைக் கேட்கும்போது சந்தோஷத்தோடு அதை அங்கீகரிக்கிறவர்களாம். ஆயினும், அவர்கள் வேரில்லாதவர்களாய், தற்காலத்துக்கு விசுவசித்து, சோதனைக்காலத்தில் பின்வாங்கிப் போகிறார்கள். முள்ளுகள் நடுவில் விதைக்கப்பெற்றது வாக்கியத்தைக் கேட்கிறவர்கள்தான். ஆயினும், அவர்கள் போய், கவலைகளாலும் ஐசுவரியங்களாலும் உலக வாழ்வின் இன்ப சுகங்களாலும் அமுக்கப்பட்டுப் பலன்கொடாதிருக்கிறார்கள். நல்லநிலத்தில் விதைக்கப்பெற்றதோ, நல்லதும் உத்தமமுமான இருதயத்தோடு வாக்கியத்தைக்கேட்டு அதைக் காப்பாற்றிப் பொறுமையால் பலன் கொடுக்கிறவர்களாம் என்று திருவுளம்பற்றினார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## அதிகார் நாகநாதர்

யாழ்ப்பாணத் தமிழ்மக்களுள் அதிககாலங்கண்ட ஓர்பெரியாராய், குணசீலராய், செல்வஞ் செல்வாக்குடையராய், தமது சமூகத்தாலும், ஹாஸ்யமொழிகளாலும் சபைகளைப் பரிமளிக்கச்செய்யும் சுமுகராய் விளங்கியிருந்தவரான அதிகார் ஏ. நாகநாதர்அவர்கள் கோப்பாயிலுள்ள தமது கிருகத்திலே சென்ற 1-ந்திகதி ஞாயிறுவாரம் காலஞ்சென்ற துயரசெய்தியறிந்து பெரிதும் மனவருத்தமுற்றோம். மரிக்கும்போது இவருக்குவயது 103. தாம் நூறு வயதுமட்டும் சீவித்திருப்போமென்று அதிகார்அவர்கள் பலவருடங்களின்முன் பலமுறையும் புன்முறுவலுடன் சொல்லக் கேட்டிருக்கிறோம். அவ்வாறே அவர் சீவித்திருந்தார். அதுவும் சுகபலங்குன்றாது, தள்ளாடாது சீவித்திருந்தார். அதற்குக்காரணம், காயகற்பமுமன்று. மந்திரமாயமுமன்று. ஆனால், அவர் சுகாதார விதிகளைக் கையாண்டு வந்தமையேயாம். பழங்காலமனிதரின் முறையைப் பின்பற்றிக் குரக்கன், வரகு, ஒடியல்முதலாம் பனம்பண்டங்கள், பால், பழம்ஆதியவற்றை அதிகமாகப்புசித்தும், அரிசிச் சாதத்தை ஒருநேரத்துடன் நிறுத்தியும், நன்கு தேகாப்பியாசஞ்செய்தும் வந்தமையேயாம். அதிகார்அவர்கள் தமக்குக் கீழ்ப்பட்டவர்கள் மட்டிலே தயைதாட்சணியமாய், சமரச சுதந்திரமனப்பாங்குடையராய், தருமசிந்தையுள்ளவராய் இருந்துவந்தாரென்பதற்குக் கோப்பாயிலே காலஞ்சென்ற சுவாமி. ஞானப்பிரகாசர்அவர்கள் கட்டியுள்ள கத்தோலிக்க கோவிலும், பிறவும் போந்த சான்றுகளாகும். இவர் நாற்பது ஆண்டுகளாக வங்கிகளில் உயர்பதவிகள்வகித்துப் பெரிதும் பிரஸ்தாபமுற்றிருந்தார். யாழ்ப்பாணக் கூட்டுறவு வங்கியின முதலாவது முகாமைத்தலைவரும், பரிபாலகரும் இவரே. இப்பெரியாரை இழந்து துன்புறுகின்ற ஏகபுதல்வரான அரசமாளிகைவாசல் முதலியார் என். கனகநாயகம் அவர்களுடனும், மற்றுமுள்ள இனசனருடனும் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

—ஆஸ்திறேலியாவிலே சிட்னிநகருக்குச் சமீபமான எப்பிங் எனுமிடத்தில் வசிப்பவரான 77 வயசுடைய தோமஸ் றையன் என்னும் பிரமச்சாரி ஒருவர் சமீபத்திலே சர்வகலாசாலைப் பிரவேசப்பரீட்சைக்குச்சென்று தவறிவிட்டார். என்றாலும் ஓர் சர்வகலாசாலை மாணவராக வேண்டுமென்று தாம்நெடுநாள் கொண்டுள்ள ஆசையைப் பூர்த்திசெய்யுமாறு இம்மாதம் மற்றிக்குலேஷன் பரீட்சைக்குச் செல்லவிருக்கின்றார்.

## TALAWILA LENTEN FESTIVALS

### 7th & 10th March—1953

| | | |
|---|---|---|
| 4th March : | | Hoisting of the Flag. |
| | | Novenas will start each day at 6-30 p. m. |
| 6th March : | 6-30 p. m. | Pontifical Vespers. |
| 7th March : | 7-30 a. m. | High Mass. |
| 9th March : | 6-30 p. m. | Pontifical Vespers. |
| 10th March : | 7-30 a. m. | High Mass. |

Houses are available. Please book early to avoid disappointment. Dues for stalls and houses must be paid before 20th February, 1953.

All stalls, except meat, vegetable and refreshment stalls will be closed during Divine Service.

Chairs, stools and tables are available for the exclusive use of pilgrims on payment of rent.

Please note that the dates of the Lenten Festivals are on 7th and 10th March and not on 8th and 15th March 1953 as erroneously printed in the "Ceylon Catholic Messenger" Almanac by an oversight.

ADMINISTRATOR,
St. Anne's Church, Talawila,
ETALAI.

தலேவில்லு, சந்தானுள் நாயகியின்

## பங்குனிப் பெருநாள்

### 7-ந் திகதியும், 10-ந் திகதியும்.

| | |
|---|---|
| 4-3-53 | கொடியேற்றம் — நவநாள்ஆரம்பம். தினசரி மாலே 6-30-க்கு நவநாள்ஆராதனே தொடங்கும். |
| 6-3-53 | மாலே 6-30 க்கு பொண்ரிபிக்கல் வேஸ்பர். |
| 7-3-53 | காலே 7-30-க்கு பாடற்பூசை. |
| 9-3-53 | மாலே 6-30-க்கு பொண்ரிபிக்கல் வேஸ்பர். |
| 10-3-53 | காலே 7-30-க்கு பாடற்பூசை. |

வாடிவீடுகள் தாராளமாய் நிறுவப்பட்டிருக்கின்றன. தயவுசெய்து நேரத்துடன் விண்ணப்பித்துக்கொள்ளவும். 20-2-53-க்குமுன் கடைவாடகைப்பணமும், வீட்டுவாடகைப்பணமும் அட்டியில்லாமல் செலுத்தப்பட வேண்டும். மாமிச, மரக்கறி, லகுபானக்கடைகள்தவிர்ந்த ஏனைய இதர கடைகள்யாவும் ஆராதனேவேளேகளில் மூடப்பட்டிருக்க வேண்டும்.

நாற்காலிகளும், மூக்காலிகளும், மேசைகளும் யாத்திரிகர்களின் பிரத்தியேக சௌகரியத்திற்காகக் கோவிலகணக்கில் வாடகைக்குக்கொடுக்கப்படும்.

தலேவில்லுப் பரிபாலன
பங்குச்சுவாமியார்
தலேவில்லு, எத்தாலே

விசுவாசப்பரப்புதற் சபைக்காகச்

## சேகரிக்கப்பெற்ற பணம்

| விசாரணைப்பங்குகள் | சேர்ந்த பணம் | அங்கத்தவர்கள் | பாடசாலைகள் |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| ஆசனக்கோவில் | 215-74 | 161-85 | — |
| சென் சாள்ஸ் பாடசாலே | — | — | 50-50 |
| திருக்குடும்பமடம், ஆங்கிலபாடசாலே | — | — | 300-00 |
| ,, தமிழ்ப்பாடசாலே | -- | — | 321-00 |
| ஆனேக்கோட்டை | 96-06 | 60-00 | 41-30 |
| அச்சுவேலி | 79-00 | — | 50-00 |
| அடைக்கலமாதா கோவில் | 109-16 | — | — |
| அநுராசபுரம் | 62-00 | — | 210-00 |
| அரிப்பு | 45-00 | — | — |
| அடம்பன் | 5-25 | — | 31-00 |
| சுன்ஞகம் | 100-42 | — | — |
| கொழும்புத்துறை | 168-80 | — | — |
| நெடுந்தீவு | — | 18-00 | 31-55 |
| இளவாலே | 273-50 | 325-00 | — |
| சென் ஹென்றீஸ் கல்லூரி | — | — | 150-00 |
| திருக்குடும்பமடம் ஆங்கிலபாடசாலே | — | — | 250-00 |
| ,, தமிழ்ப்பாடசாலே | — | — | 125-00 |
| ஆசிரியர்கள் | — | — | 149-00 |
| ஊர்காவற்றுறை | 68-50 | 84-00 | 38-70 |
| கரம்பன் | 222-70 | — | — |
| கெக்கிருலவை | 10-45 | — | — |
| மருதமடு | 44-75 | 9-53 | — |
| மயிலிட்டி | 18-75 | 7-50 | 39-50 |
| முல்லேத்தீவு | 71-77 | — | — |
| முருங்கன் | 25-21 | — | — |
| மன்ஞர் | 505-00 | — | — |
| மிருசுவில் | 10-00 | 22-00 | 22-50 |
| மாதகல் | 14-50 | — | — |
| மண்டைதீவு | 20-50 | 4-50 | — |
| நல்லூர் | 46-00 | 18-00 | 8-00 |
| நாரைட்டான் | 34-82 | — | 20-20 |
| நாரந்தனே | 31-60 | 26-50 | 45-70 |
| ஊறணி | 79-90 | 135-00 | 10-85 |
| பேசாலே | 331-50 | 4-50 | 54-62 |
| பண்டத்தரிப்பு | 51-81 | 52-00 | 15-00 |
| புதுக்குடியிருப்பு | 19-00 | 27-00 | 14-00 |
| பள்ளிமுனே | 74-19 | — | — |
| பாஷையூர் | 75-40 | — | 131-20 |
| பருத்தித்துறை | 63-20 | — | — |
| சில்லாலே | 40-00 | 150-00 | 30-00 |
| சந்தியோகுமையோர்கோவில் (யாழ்ப்பாணம்) | 148-36 | — | 290-00 |
| சந்தியோகுமையோர்கோவில் (இளவாலே) | 14-62 | — | — |
| தாளேயடி | 25-25 | 4-50 | — |
| தலேமன்ஞர் | 74-00 | — | — |
| விடத்தற்தீவு | 32-90 | 10-50 | 6-94 |
| வதிரி | 96-77 | 52-00 | 41-00 |
| வழிமீசாம் | 60-00 | — | 20-00 |
| வங்காலே | 215-80 | — | — |
| வவுனியா | 37-19 | — | — |
| **திருப்பாலத்துவ சபை** | | | |
| ஆசனக்கோவில் | 244-44 | — | — |
| அடைக்சலமாதா கோவில் | 94-50 | — | — |
| இளவாலே | 50-00 | — | — |
| ஊர்காவற்றுறை | 6-00 | — | — |
| முல்லேத்தீவு | 56-00 | — | — |
| முருங்கன் | 2-46 | — | — |
| மாதகல் | 20-50 | — | — |
| நாரைட்டான் | 1-16 | — | — |
| ஊறணி | 15-01 | — | — |
| பள்ளிமுனே | 18-00 | — | — |
| பேசாலே | 42-62 | — | — |
| பாஷையூர் | 11-93 | — | — |
| சில்லாலே | 7-58 | — | — |
| தலேமன்ஞர் | 44-08 | — | — |
| வதிரி | 5-22 | — | — |
| **பேதுருவானவர் சபை** | | | |
| அடைக்கலமாதா கோவில் | 47-20 | — | — |

## சுதேசவர்த்தமானம்

### சாராயத்தினிடமாகப் பீர்

சாராயத்தின்பாவனையைத் தடுக்கக்கூடியவகையிலே அதன் விலையை உயர்த்தியகாரணமாகச் சென்றவருடத்தில் இலங்கையிலே மலிவான பீர்குடிவகைப்பாவனே மிகவும் அதிகரித்திருப்பதாக அறிக்கையிடப் பட்டிருக்கிறது. 1951-ம்ஆண்டிலே செலவான சாராயம் 19,00,368 கலன். ஆனல், சென்ற 1952-ம் ஆண்டில் செலவான சாராயம் 5,93,430 கலன்மாத்திரமே. இதனிடமாகப் பீர்ப்பாவனே முந்திய வருடத்திலும் 4,50,000 கலனுலே அதிகரித்திருக்கிறது. உயர்ந்த விலே காரணமாகச் சென்றவருடத்திலே விஸ்கி, பிறண்டி, ஜின் ஆதியவற்றின் பாவனேயும் குறைந்துபோயிருக்கிறது.

### மனிஆடர் மாற்றுங்காலம்

எவராவது ஓர்மனிஆடர் பெற்றுக்கொள்ளுமிடத்து இனிமேல் அதை ஆறுமாதத்துள் மாற்றிக் கொள்ள வேண்டும். மனிஆடர் செல்லக்கூடிய காலத்தைத் தபால்அதிகாரிகள் ஒரு வருடத்திலிருந்து ஆறு மாதமாகக் குறைத்து விட்டிருக்கிருர்கள். இது தவிர, மனிஆடராகப் பணத்தைமாற்றுவதற்கெனக் கொடுபடவேண்டிய சலாரும் பத்துச்சதத்திலிருந்து இருபதுசதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. பத்துச்சதசலார் இருபத்தைந்துவருடங்களின்முன் விதிக்கப்பட்டதாகும். தற்போதோ அதற்குரியசெலவு எவ்வளவோ அதிகரித்திருப்பதே இந்தஏற்றத்திற்குரிய காரணமாகும்.

### அமெரிக்க-இலங்கை விமானசேவை

அத்திலாந்திக்சமுத்திர வழியாய் உலக விமானப்பிரயாண சேவைநடத்தும் கம்பெனியானது ஐக்கியஅமெரிக்க தேசத்துக்கும், இலங்கைக்குமிடையே நேரடியான விமானப்பிரயாண சேவைஒன்றைச் சென்றசெவ்வாயன்று தொடக்கியிருக்கிறது. இதில் ஈடுபடும்விமானம் செவ்வாய்க்கிழமை தோறும் நியூயோக்நகரிலிருந்து புறப்பட்டுப் பரீஸ், ரோம், கெய்ரோ, காரச்சி, பம்பாய்முதலாம் நகர்களேக் கண்டு ஒவ்வோர்வியாழக்கிழமை மத்தியானமும் கொழும்புவந்துசேரும். பின்னர் அது வெள்ளிக்கிழமைதோறும் கொழும்பிலிருந்துபுறப்பட்டுச் சனிக்கிழமை நியூயோக்நகர்போய்ச்சேரும்.

## அரசாங்க அறிக்கை

### பொதுத்திறைசேரி — கொழும்பு

No. 255.

1-2-53 தொடக்கம் சாவகச்சேரித் தபாற்கந்தோர் திறைசேரிக் கந்தோராகவும் தொழிற்படும்.

## மனந்திரும்பிய ஜெனறல்

கோறியாவிலே சென்றமார் கழிமாதம் 12-ந் திகதியன்று கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொண்ட ஜெனறல் ஜேம்ஸ் பிறைஅவர்கள்நத்தால் திருநாளன்றுகாலே நியூயோக்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்பெல்மன் ஆண்டவரால் உறுதிப்பூசுதல் செய்யப்படலாயினர். அன்று ஜெனறலின் 55-வது வருடப் பிறந்தினயாகும். அவ்வேளேபெருந்தொகையான அமெரிக்கபோர் வீரர் அங்கு சமுகமளித்திருந்தார்கள். அமெரிக்க எட்டாவது சேனேயின் தளபதியான ஜெனறல்வான்பிளீற்அவர்களும் சமுகமாயிருந்தனர். கருதினல் ஆண்டவர் கோறியாவில்தங்கியிருந்த எட்டுத்தினங்களிலும் யுத்தபீரங்கிகளின் முழக்கத்தின்மத்தியிலே விமானத்திலும், ஜீப்பிலும்சென்று 14,000போர் வீரர்களேச் சந்திக்கலாயினர்.

# பாலர் பக்கம்

## அண்ணு சொல்வது

அருமைச் சகோதரங்களே!

நான் உங்களுக்கு அறிவித்தபடி கதை எழுதுவதில் எல்லோரும் முயற்சியாய் இருக்கிறீர்கள் என்று அறிகிறேன். மேற்றிராணியாண்டவருடைய நத்தால் கடிதத்தைத் தேடி எடுத்தீர்களாம்; ஆராய்வாய்ப் படித்தீர்களாம்; இராப்பகலாய்க் கதையை எப்படி எழுதிமுடிக்கலாம் என்ற கவலை நிறைந்தவர்களாய்க் காணப் படுகிறீர்கள் என்று நான் விசாரித்தறிந்தேன்.

உங்களுக்கு அதிக ஆர்வத்தை உண்டாக்கும் நோக்கமாகக் கதைப்போட்டி முடிவுத் திகதியைப் பின்போட்டிருக்கிறேன். நீங்கள் எழுதும் கதைகளைப் பின்வரும் விலாசத்திற்கு மாசிமாதம் 16-ந் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வையுங்கள். வணக்கம்.

உங்கள் அன்புள்ள
அண்ணு

**விலாசம்:**

அண்ணு அவர்கட்கு
மேற்றிராணியார் இல்லம்
யாழ்ப்பாணம்

# நல்லோராக வாழுவோம்

I

பூனை ஒன்று வந்தது
பொல்லா எலியைக் கண்டது
ஞானி போல் இருந்தது
நகர்ந்து பாய்ந்து கொன்றது.

II

பாம்பு சீறி வந்தது
பகைவன் கீரி கண்டது
தீங்கு செய்யும் முன்னமே
திருகிக் கடித்துக் கொன்றது

III

கொல்லும் புலியுஞ் சிங்கமும்
குமுறிக் கொண்டு வந்தன
வில்லில் அம்பைப் பூட்டியே
வேடன் கொன்று தீர்த்தனன்

IV

தீங்கு செய்யுந் தீயரைத்
தேடித் திரிவர் பகைவர்கள்
நாங்கள் இந்தப் பூமியில்
நல்லோராக வாழுவோம்

"ஜெயம்"

## தேவநற்கருணை

சுவிசேஷத்தில் விபரித்திருக்கும் யேசுநாதருடைய புதுமைகளைச் சற்றுக் கூர்ந்து கவனியுங்கள். யேசுநாதர் தம்முடைய சரீரத்தின் வழியாய் மனிதருடைய சரீரத்திற்கு அநேக நன்மைகளைச் செய்து, அநேக வருத்தங்களைக் குணமாக்கினுரென்ருல், ஒருமுறை தேவநற்கருணை உட்கொள்வதினுல் எங்கள் ஆத்துமத்திற்கு வரக்கூடிய நன்மைகளை எடுத்துரைக்க முடியுமா?

ஏழைவிதவையின் மகனுடைய சடலம்இருந்த பாடையைத் தொட்டதும் அவன் உயிருடன் எழுந்தான். தாய் மகிழ்வெய்தினுள். யேசுநாதர் தமது உமிழ்நீரால் அந்தகனுடைய கண்களைத் தொடவே, அவன் பார்வை அடைந்தான். யேசுநாதருடைய பேச்சு செவிடருக்குக் கேள்வியைக் கொடுத்தது. அப்படியாயின் தேவநற்கருணையில் நாம் உட்கொள்ளும் திருச்சரீரத்தின் வல்லமை எவ்வளவாகவிருக்கும்?

## மாதாபக்தி

ஒரு அதிமேற்றிராசனமும், ஆறு மேற்றிராசனங்களும் அடங்கிய நியு ஓர்லியன்ஸ் மாகாணத்தில் மாபெரும் செபமாலைக்கூட்டம் ஒன்று நடந்தது. இந்தமாகாணத்தைச்சேர்ந்த ஐம்பதினுயிரம் ஆடவர்கள் வீடுவீடாய்த் திரிந்து குடும்பசெபமாலைப் பக்தியை அனுசரிக்கக் குடும்பங்களின் சம்மதவாக்குச் சேர்த்தார்கள்.

* * *

பரிசுத்த கன்னிமரியாய் "இந்தியாவின் பரலோக பாதுகாவலர்" எனப் பரிசுத்த ஸ்தானம் பிரசித்தப்படுத்தியிருக்கிறது. இந்தியமேற்றிராணிமாரின் விண்ணப்பத்துக் கிசையப் பாதுகாவலர்தினம் ஆவணிமாதம் 15-ந்திகதி கொண்டாடப்படும். அதுவே இந்தியாவின் சுதந்திர தினமுமாகும்.

* * *

கடந்த ஐந்தாண்டுகளில் ஆங்கிளிக்கன் பிரிவினைச் சபையார் கன்னிமரியாய் மட்டில் திருந்திய மனப்பான்மை காட்டி வருகிறுர்கள். அநேகப்பற்றுன அங்கிளிக்கன் பங்குவிசாரணைக் கோயில்களில் தேவமாதாவுக்கு ஓர் பீடம் அமைத்துவரப் படுகின்றது. கெய்ரோ மேற்றிராசனக் கோயிலில் கண்ணுடியன்னல் சித்திரம் அமைத்ததுடன் மாதாபக்தி அதிகவிருத்தி ரோமைச் சபையுடன் ஒற்றுமையை நோக்கி அடைந்திருக்கிறது.

இந்தயன்னல் சித்திரம் பிரித்தானிய எட்டாம் சேனையின் கொடையாகும்.

* * *

"தேவமாதாவில் பத்தியாயிருந்தால் நீ எப்போதும் சந்தோஷமாய் இருப்பாய்.

—அர்ச். தொன்போஸ்கோ.

## உங்களுக்குத் தெரியுமா?

1. ஐக்கிய அமெரிக்கதேச நியூயோக்நகரிலே இருந்துவருகின்ற சக்கிராதிபத்திய இராச்சியகட்டடமே (Empire State Building) என்ற உலகில் மகாஉந்நதமான கட்டடம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

2. பாலிலுள்ள தண்ணீரின் அளவை அளந்தறிய உபயோகிக்கும் கருவியின் பெயர் லக்ரோமீற்றர் (Lacto meter) என்பது உங்களுக்குத் தெரியுமா?

3. இலங்கையிலே வெந்நீர் ஊற்றுகள் திரிகோணமலையில் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா?

4. மீன்கள் காதுகளைக் கொண்டிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா?

5. பறவைகளுக்குப் பற்கள் இல்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?

6. உலகில்அதிகமான தென்னைவிளை பொருட்களை உற்பத்திசெய்வது பிலிப்பைன்ஸ் நாடுதான் என்பது உங்களுக்குத் தெரியுமா?

7. திருச்சபையிலுள்ள அதிகம்இளவயதுடைய கருதினல்மார்களில் பம்பாய்நகர அதிமேற்றிராணியாராகிய கருதினல் கிருசியாஸ் ஆண்டவரும் ஒருவர்என்பது உங்களுக்குத் தெரியுமா?

8. திருச்சபையிலே பாப்பரசருக்கு அடுத்தபடியாக உயர்ந்த அதிகாரவரிசையில் உள்ளவர்கள் கருதினல்மாரே என்பது உங்களுக்குத் தெரியுமா?

9. நாம்வாழும் இந்தப்பூமியானது 5 கோடியே 70 லட்சம் சதுரமைல் விஸ்தீரணமுடையதும், 240 கோடி சனங்களை அடக்கியதுமாய் இருந்தபோதிலும் வானமண்டலத்திலுள்ள கிரகங்களில் எல்லாம் அதிகஞ்சிறியது என்பதும், அங்குள்ள 1 கோடியே 20 லட்சம் நட்சத்திரங்களுள் ஒன்று என்பதும் உங்களுக்குத் தெரியுமா?

10. உலகின் ஐந்துகண்டங்களிலும் ஆசியாக்கண்டத்தில்தான் கூடியதொகையான சனங்கள் (127 கோடியே 22 லட்சம்) வசிக்கிறுர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

11. கத்தோலிக்கராய் 42 கோடியே 20 லட்சம்பேரும், பூர்வீக பிரிவினைச் சபைக் கிறீஸ்தவர்களாய் 16 கோடியே 10 லட்சம் பேரும், பல்வேறு சபைகளைச்சேர்ந்த புரொட்டஸ்தாந்தர்களாய் 20 கோடியே 20 லட்சம் பேருமாய் உலகமுழுவதிலும் 78 கோடியே 50 லட்சம் கிறீஸ்தவர்கள் இருக்கிறுர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

12. "பைபிள்" என்றசொல் புத்தகம் என்னும் அர்த்தமுடைய பிவிலியன் எனும் கிரேக்கமொழியிலிருந்து பிறந்ததுஎன்பது உங்களுக்குத் தெரியுமா?

13. பாப்பரசரால் வழங்கப்படும் எட்டு மகிமைப்பட்டங்களில் கத்தோலிக்கர் அல்லாதோருக்கும் வழங்கப்படக்கூடிய மகிமைப்பட்டம் "பத்திநாதரின் மகிமைவரிசை" என்பது உங்களுக்குத் தெரியுமா?

# கோவைத் திருயாத்திரை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முனிவரின் பிறப்பிடத்தைத் தரிசித்து வரச்சென்ருேம். துறைமுகத்திலிருந்து சுமார் 15 மைல்தூரத்திலுள்ள சங்குவெலிஎன்ற இடத்தையடைந்தோம். முனிவரின் பிறப்பிடம் இதுவென அறிந்து பூரிப்புற்ருேம். அங்கு அழகியபுராதனமான பிலிப்புநேரியார் கோவில் திகழ்கின்றது. கோவைக்குருமார் அக்காலை பிலிப்புநேரியாரின் தியானசம்பிரதாயசபையைச் சேர்ந்திருந்தனர். அவர்களின் சபை நிலையத்தையும் பார்வையிட்டோம். கோவிலுக்குச் சிலயார்தூரத்தில் முனிவரின்நிவாசம் இருக்கிறது. இப்போது இந்தவீடு ஒருசெபக்கூடமாக மாறியிருக்கிறது. அங்கே ஒரு அநாதசாலையும் நிறுவப்பட்டுளது. முனிவர் நட்டுவளர்த்த பலாமரம் இன்றும் தழைத்து நிற்கிறது. அவருடையநிவாசத்தில் கடமைபுரியும் குருவானவருடன் அளவளாவினேம். அங்கு முனிந்திரனைப்பற்றிய சரித்திரவாலாறுகள் சித்திரமாகத் தீட்டப்பட்டிருப்பதைக்கண்டு பெருவியப்படைந்தோம். யோசேவாஸ் முனிவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டுவிப்பதற்காக அங்கு பெருமுயற்சி எடுக்கப்பட்டு வருவதையறிந்து ஆனந்தமடைந்தோம். பின்பு யாத்திரிகரெல்லோரும் இயன்றவரை கோவை நாட்டைச் சேர்ந்த அயற்கிராமங்களைப் பார்வையிட்டுக்கொண்டு கப்பலேறினர்.

### யாத்திரையிலிருந்து திரும்புகை

இலங்கைத் தாயின் திருச்சுரூபம் கப்பலில்இருப்பதை முன்னிட்டு யாத்திரிகரனைவரும் மிகுந்தபத்தி அடக்கமாய் இருந்தனர். இரவுபகல் இடையில்லாமல் நாங்கள் கூட்டம் கூட்டமாகவும், குடும்பம் குடும்பமாகவும், வகுப்புவகுப்பாகவும் பிரிந்துசென்று மாதாவுக்கு வழிபாடுசெலுத்தினேம். மாதாவுக்கு வந்தனைவழிபாடு செலுத்தத் தமிழ்மக்களுக்கு இரவிலும்பகலுமாக மூன்றுதருணங்கள் கொடுக்கப்பட்டன. மார்கழிமாதம் 8-ந்திகதி மாதாவின்திருநாள் நடுக்கடலில் வெகு பத்திச்சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. அன்று ஒருசிறுமி முதல்நன்மை பெறும் சலாக்கியத்தைப் பெற்றுக் கொண்டாள்.

மாதாவின்முன் தமிழ்மக்கள் கூடி வாழ்த்துச் செபம் சொல்லிக்கொண்டிருக்கும்போது கப்பல் இலங்கையை நோக்கிப் புறப்பட்டது. முன்போலக் கப்பலில்ஞானமுயற்சிகளும், ஆராதனைகளும் தொடர்பாக நடைபெற்றன. சாயந்தரவேளைகளில் மாலைஆராதனைகள் விமரிசையாய் நடைபெற்றன. அதிமேற்றிராணி யாண்டவர் அவ்வப்போது வேண்டிய ஞானஉணர்த்துதல்களைத்தந்துகொண்டிருந்தார். லங்காநாயகியின் திருச்சுரூப சாயலமைப்புப் பற்றி விரிவுரைநிகழ்த்தினர். நிரந்தரசகாயமாதாவின் பத்திமுயற்சியும் பரிமளிப்பாய் நடைபெற்றது. பிரயாணத்தின் மூன்றுநாட்களிலும் ஞானஒடுக்கநாட்களைப்போல் ஞான முயற்சிகள் சிறப்பாய்நடைபெற்றன.

கப்பல் 11-ந்திகதி கொழும்புத் துறைமுகத்தை யடைந்தது. கோவை யாத்திரை நன்ருகமுடிவு பெற்றதற்காகத் தேவனுக்கு நன்றியறிதல்ஆராதனை நடத்தப்பட்டது. மாதாவுக்கு வாழ்த்துக்கூறப்பட்டது. துறைமுகப்பாலத்தில் மாதாவைவரவேற்கப் பல்லாயிரம் மக்கள் வந்திருந்தனர். பிரபலஸ்தரும், குருமாரும் மாதாவைஉபசரிக்கக் கப்பலை யடைந்தனர். எல்லோரினதும் ஏகோபித்த வாழ்த்தொலியுடன் லங்காநாயகியின் திருச்சுரூபம் கப்பலைவிட்டு இறக்கப்பட்டுக் கரைக்குக் கொண்டுவரப்பட்டது. மாதாவின்பாதுகாவலில் யாத்திரிகராகிய நாமெல்லோரும் சேமமாகக் கரைசேர்ந்தோம். சுபம்!

—பம்பாய் மாகாணத்தின் கிராமப்பகுதிகளிலே அறுபது லட்சத்துக்கு மேற்பட்டமக்கள் பசிபட்டினியால் வாடிவதங்குகின்றனரென்றும், அவர்களில் ஆயிரக்கணக்கானேர் வேலையும் உணவுந்தேடி வேறிடங்களுக்குச் செல்ல ஏலவேதானே தொடங்கிவிட்டனரென்றும் பம்பாய்நகரிலிருந்து சென்ற 1-ந்திகதி செய்திகிடைத்திருக்கிறது. பம்பாய்மாகாணத்தில் வசிக்குஞ் சனங்களில் கால்வாசிப்பேர்பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளனரென்று பம்பாய் வருமானமந்திரி தெரிவித்திருக்கிறுர்.

## வேத வினுவிடை

— VIII —

ஆவியானவர் எங்களே அர்ச்சிப்பவர்

(2) நம்பிக்கை

(முன்தொடர்ச்சி)

55. வேண்டுதலும் அதற்குவிரோதமான பாவமும்ஆனவை என்ன?

ஆத்துமசரீரநன்மைகளைச் சருவேசுரனிடமிருந்து கெஞ்சிமன்ருடுவதும், அவரிடமிருந்து நமக்காகமன்ருடும்படி அர்ச்சியசிஷ்டர்களைக் கேட்பதுமே வேண்டுதலாம். சருவேசுரன் ஒரு நூதனமானகாரியத்தைத் தருவாரோ என்று பார்ப்பதற்காகச்செய்யும் தேவபரிசோதிப்பும்; ஒரு வீண் அனுசரிப்புக்குச் சருவேசுரனுடைய கிருபையினுலோ, திருச்சபையின்மன்ருட்டினுலோ, இயற்கையினுலோ இல்லாதத்துவத்தை இருக்கிறதென்று எண்ணி அதைச்செய்யும் சகுனசாஸ்திரமும்; சாத்தானிடமிருந்து உதவிகளைப் பெறுவதற்காகநடத்தும் பேய்க்காரியமும் வேண்டுதலுக்கு விரோதமான பாவங்களாம்.

"கேளுங்கள் கொடுக்கப்படும் — வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு எவ்வளவோ அதிகமாய்த் தந்தருளுவார்"—மத். VII. 7, 11.

56. தேவபரிசோதிப்பின் கிரியைகள் எவை?

தன்உயிரைச் சருவேசுரன் காப்பாற்றுவாரென்று அவசியமில்லாமல் தன்னைமாணஆபத்துக்கு உட்படுத்துவது; தனக்குச் சருவேசுரன் புதுமையினுல் சௌக்கியங்கொடுப்பாரென்று கடும் வியாதிக்குத்தக்க மருந்துகளை வேணுமென்று பாவியாமலிருப்பது; தன்மாசில்லாமையை ஒப்பிப்பதற்கு நெருப்புக்குள் கைவைப்பது; குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்குச் திருவுளச்சீட்டுப்போடுவது முதலியனவாம்.

57. சகுனசாஸ்திரத்தின் கிரியைகள் எவை?

குறித்தசெபத்தைச் சொல்லும் மாதிரியிலோ, பரப்பும்விதத்திலோ என்னவோவித்தை தங்கியிருக்கிறதென்று எண்ணி அதைஅப்படிச் சொல்வது அல்லது பரப்புவது; கள்ளனைக் கண்டுபிடிக்கச் சுரூபத்துக்கு இலைகட்டுவது; சோசினிய, சாதக, கைக்குறி, பல்லி, பட்சி என்னும் சாஸ்திரங்களால் அறியக்கூடாத காரியங்களை அறியத்தெண்டிப்பது; சுபதினம், முகூர்த்தம், குறி, வசியம், மயக்கம் என்பவைகளை அநுசரிப்பது முதலியனவாம்.

58. பேய்க்காரியத்தின் கிரியைகள் எவை?

பசாசினுல வருத்தத்தைக் குணமாக்கப் பார்க்கப்படும் பார்வை; காணமற்போனதைக் கண்டுபிடிக்க நிமித்தசாஸ்திரம்; அதிசயங்களைச்செய்ய மாயவித்தை; பிறருக்குத்தீங்குவருவிக்கப் பில்லிசூனியம்; சூனியத்தை எடுக்க அழிகட்டுதல் முதலியனவாம்.

59. வேண்டுதலேவிட வேறுஎதைச் செபம்என்கிறோம்?

வேண்டுதலேத்தான் ஆகஒடுக்கமான கருத்தின்படி செபம் என்கிறோம். ஆனுல், அகண்ட கருத்தின்படி நாம் சருவேசுரனுக்குச்செலுத்தும் கடமைகளாகிய ஆராதனை, தோத்திரம், பரிகாரம்முதலியவற்றை, அதாவது நாம் அவரோடுநடத்தும் உள்சீவியம் முழுவதையும் செபம்என்கிறோம். இன்னும் விசாலமானகருத்தின்படி நாம் பிறரோடுநடத்தும் வெளிச்சீவியக் கிரியைகளைச் சருவேசுரனுடைய மகிமைக்காகச் செய்தால், அவைகளையும் அதாவது உள்சீவியத்தையும் வெளிச்சீவியத்தையும் அடக்கியுள்ள ஞானச்சீவியம்முழுவதையும் செபம்என்கிறோம்.

60. வேண்டுதற்செபம் நமதுஈடேற்றத்திற்குஅவசியமா?

சருவேசுரன் நமது ஈடேற்றத்திற்குத்தேவையான சில பிரசாதங்களை வேண்டுதல்செய்யமுதலே தந்தாலும, வேறுசிலவற்றை வேண்டுதலின்பின் தான் தருகிறபடியால் வேண்டுதற்செபம் அவசியந்தான்.

"உம்முடைய இராச்சியத்தில் சேரும்போது அடியேனை நினைத்தருளும்—இன்றே நீ என்னுேடு கூடப் பாகதியிலிருப்பாய்"—லூ. XXIII. 42—43.

61. மனஸ்தாபமும் அதற்குவிரோதமான பாவமும்ஆனவைஎன்ன?

நாம் கட்டிக்கொண்ட பாவங்களைச் சருவேசுரனுக்காகவெறுத்து அவைகளை விட்டுவிடத்தீர்மானித்து மனந்திரும்புவதே மனஸ்தாபமாம். அப்படி மனந்திரும்பாமல்இருப்பதே மனக்கடினமென்னும் மனஸ்தாபத்துக்கு விரோதமான பாவமாம்.

"மனஸ்தாபத்தினுலே நொறுங்கித் தாழ்ச்சியுள்ள இருதயத்தைப் புறக்கணிக்க மாட்டீரே, சுவாமி" —சங். L. 17.

62. அனுபவிப்பும் அதற்குவிரோதமான பாவமும்ஆனவை என்ன?

திருச்சபை திவ்விய அநுமானங்களினுலே, திவ்விய அநுமானியங்களினுலே பரிமாறும் தேவப்பிரசாதங்களைப் பெறுவதும், விசேஷமாய்ப் பாஸ்குகாலத்தில் வருஷத்தில் ஒரு முறைஎன்கிலும் நற்கருணைஉட்கொள்வதுமே அனுபவிப்பாம். அப்படிப் பெறக் கடமையாயிருக்கும்போது பெறுமலும், பாஸ்குநற்கருணையை உட்கொள்ளாமலும்இருப்பதே அனுபவிப்புக்குவிரோதமான பாவமாம்.

"ஒருவன் சலத்தினுலும், இஸ்பிரீத்துசாந்துவினுலும் மறுபடியும் பிறவாதிருக்கில் சருவேசுரனுடையஇராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டான்"—அரு. III. 5.

"நீங்கள் மனுமகனுடைய மாம்சத்தைப் புசியாமல் இருந்தால் உங்களிடத்தில் சீவனைக் கொண்டிருக்கமாட்டீர்கள்" — அரு. VI. 54.

63. நம்பிக்கைப் புண்ணியத்துக்கு இசைவான தேவபயவரம் ஆவது என்ன?

நம்பிக்கையின் தேவவாக்குத்தத்தங்களைத் தக்கவிதமாய்மதித்து, அவைகளை நமதுபாவத்தினுல் இழந்துபோக அஞ்சத்தக்கதாக ஆவியானவருடைய ஏவுதல்களை ஏற்றுக்கொள்ளப் பண்ணும் ஆத்துமத்தின்பக்குவமே தேவபய வரமாம்.

64. நம்பிக்கைப் புண்ணியத்துக்கு இசைவான சந்தோஷக்கனி ஆவது என்ன?

ஆவியானவர் நம்மால் நம்பிக்கைக் கிரியைஒன்றை உத்தமமாய்ச் செய்து முடிப்பதினுல் நமக்கு வருவிக்கும் இன்பமுள்ள பாக்கியமே சந்தோஷக் கனியாம்.

---

—ஜெனறல் ஐஸன் ஹாவாது ஆட்சியிலே அமெரிக்க புதியவெளிநாட்டு மந்திரியாரான திரு. ஜோண் டல்லெஸ் அவர்கள் சென்ற புதன்கிழமை தமது முதலாவது செய்தியிலே கோறியாவில் நடந்தேறும் யுத்தவிஷயமாய்க் கம்யூனிஸ்தர்கள் தங்கள் மனதை மாற்றிக்கொள்ளும்படி புதியஜனதிபதி செய்யக்கூடியவராவாரெனத் தெரிவித்திருக்கின்ருர்.

—அமெரிக்க மாஜி ஜனதிபதியான திரு. ட்றூமன் அவர்கள் சென் லூயிஸ் நகரிலே சென்ற வெள்ளிக்கிழமை பேசியபோது, காரியப்படக்கூடிய அணுக்குண்டு ஒன்றை ருஷியாவைத் திருக்கிறதென்பது தமக்குச்சந்தேகமேயெனத் தாம் முன்னர்கூறியதை மீண்டும் தாபித்திருக்கின்ருர்.

## எனது கோவை யாத்திரை

(சென்றவாரத் தொடர்ச்சி)

நாங்கள்தங்குவதற்குச் சித்தஞ்செய்யப்பட்டிருந்த அர்ச். மொனிக்காமடத்திலே இரவுதங்கியபின் மறுநாள் 13-ந்திகதி காலை எங்கள் யாத்திரைத் தலைவர்சுவாமிகளின் கேள்விப்படி, அவரால் நிறைவேறவிருந்த திவ்வியபூசையைக்காணும்படி ஓர் சிற்றாலயஞ் சென்றோம். அதிலே சுவாமியவர்கள் திவ்வியபூசை நிறைவேற்றிய பலிபீடமானது விசேஷப்பட்டதொன்றாகும். அப்பீடத்தின்மேல் வைக்கப்பட்டிருந்த பாடுபட்டசுரூபத்திலிருந்து இரத்தம் பொசிந்ததாகச் சுவாமியவர்களேதமது பிரசங்கத்தில் தெரிவித்தார். இந்தப் பீடத்திலே இருதினம் நான் பூசைக்கு ஆயத்தஞ்செய்து, பூசைக்கு உதவ, பெருந்தொகையானேர் திவ்விய நன்மை பெற்றுக்கொண்டனர். நாங்கள் திருமேனியைத்தரிசித்து வணங்கிப் பக்திசெய்வதற்கெனப் 13-ந் திகதியன்றே தனிஒழுங்கு செய்யப்பட்டிருந்தமையால் குறித்தநேரம்வந்ததும், ஏலவே தரிசனைக்கென்று இருவரிசையாக நின்றுகொண்டிருந்த பல்லாயிரக் கணக்கான பிறயாத்திரிகர்களுக்குத் தரிசனை நிறுத்தப்பட்டு, எங்களுக்கென்று ஓர் புதுவரிசை உண்டாக்கிவேறுகதவால் எங்களைச் செல்ல வைத்தமையையிட்டு நாம் அடைந்த பேரானந்தமோ இம்மட்டன்று.

இப்பெரும் ஆனந்தத்தின்மத்தியில் அளவிடற்கரிய ஞானமனேற்சாகத்துடன் எல்லவரும் தத்தமஉள்ளங்களில் பெரிதும்உருக்கமாகச் செபஞ்செய்துகொண்டு உணர்ச்சிததும்ப மெல்லமெல்ல நடந்துசென்று அர்ச்சியசிஷ்டரின் திருமேனியை இருகண்குளிர, ஆசைதீரப்பார்த்து அவர்திருப்பாதங்களை ஆவலுடன் தடவிமுத்திசெய்து, நாவால்வர்ணிக்கமுடியாத அகமகிழ்ச்சி, முகமலர்ச்சிகொள்ளலானேம். அத்திருநகரில் நாங்கள் தங்கியிருந்த முத்தினங்களும் அப்பூசிததிருமேனியைத் தரிசித்துமுத்தமிட எமக்குக்கிடைத்த பெரும்பாக்கியத்தை — எல்லோருக்குங்கிட்டாத ஓர் பெரும் வரத்தை உள்ளூாநினைந்து ஆனந்தக் கண்ணீர் உகுக்கலானேம். அர்ச்சியசிஷ்டரை எங்கள்வாயாா, மனதாரப் போற்றித்துதித்தோம். மற்றும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் அதிகந்தூரத்திலே இருவரிசையில் மணித்தியாலக்கணக்காகப் பசிதாகத்தைப் பாராது தகிக்கும்வெயிலில் நின்றுகொண்டு அடிமேல்அடிவைத்து நகர்ந்துசெல்ல, நாங்களோ முன்னணியில்சென்று தமதுதிருமேனியை மிக இலகுவில் தரிசிக்கவைத்த அர்ச்சியசிஷ்டரை வாழ்த்திக்கொண்டாடினேம். இவையெல்லாம் நாங்கள் யாத்திரையாகப்புறப்படுமுன் செய்துகொண்ட அர்ச். சவேரியாரின் நவநாட்பலன்என்றே சொல்வேன்.

அப்பதியில்தங்கியிருந்த மூன்றுநாட்களிலும் நாங்கள்கண்ட பிறஅதிசயங்களில் சிலவற்றையாவது எடுத்துக்கூறுமல்விடுதல் முறையன்று. திருச்சரீரம் காட்சிக்குவைக்கப்பட்டிருந்த ஆசனக்கோயிலின் அருகாமையில் அர்ச்சியசிஷ்டரின் கல்லறைக்கோவில் இருக்கிறது. இங்கிருந்தே அப்புனிதஉடல் பகிரங்ககாட்சிக்கும், பிரசித்தவணக்கத்துக்குமாக மார்கழிமாதம் 3-ந் திகதியன்று ஆசனக்கோவிலுக்குக் கொண்டு போகப்பட்டது. இந்தக் கல்லறைக்கோவிலின் ஓர்பாகத்தில்தான் கல்லறைப்பீடம் இருந்துவருகிறது. இந்தப் பீடத்தில் நாலுபக்கமும் ஒரேநோத்தில் திவ்வியபூசைகள் நிறைவேறத்தக்கதாய் விலையேறப்பெற்ற இரத்தினக் கற்கள்பதித்த ஓர்பீடத்தின்மேல் அவரின் கல்லறை மிகவேலைப்பாடுள்ள விலைமதித்தற்கரிய நவரத்தினங்கள்பதித்துச் செய்துவைக்கப்பட்டிருக்கிறது. பெருந்தொகையான அர்ச்சியசிஷ்டர்களின்படங்களும், சுரூபங்களும் ஆங்காங்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. கோவில்முழுவதும், சுவர்கள்முதலாய்ப் பொன்முலாம்கொடுத்துச் சித்திரவேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளைக்கண்டு ஆனந்தமுற்றபின் இருகோவில்களுக்கும மத்தியில் இன்னுமோர்கோவில் இருக்கக்கண்ணுற்றோம். இதுவும் மிகப்பிரமாண்டமான கட்டிடம். இந்தக்கோவில் அர்ச். பிரான்சிஸ்அசீசியார் கோவிலெனஅறியலானேம். இதுவும் சிறந்த சித்திரவேலைப்பாடுகளைக்கொண்டதாய் அலங்காரமுற்றுத்திகழுகின்றது. இங்கும் அநேகஅர்ச்சியசிஷ்டர்களின் படங்களும, சுரூபங்களும் காட்சியளித்தன. இவைதவிர, அக்காலத்திலே குருமாரால்பாவிக்கப்பட்ட மிக விலையேறப்பெற்ற பூசைஉடுப்புகள், பூசைப்பாத்திரங்கள், கதிர்ப்பாத்திரங்கள்முதலியன கண்ணுடிக்கூண்டுகளில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. பூசைப்பாத்திரங்களும், கதிர்ப்பாத்திரங்களும் தற்போதுபாவனையிலிருக்கும்பாத்திரங்களிலும் மிகஉயர்ந்தனவும், பருமையானவையும், சிறந்த வேலைப்பாடுள்ளனவும், விலைமதித்தற்கரியனவுமாய்ப் பெரிதும் பிரமிப்பை உண்டுபண்ணலாயின. இவைகளையெல்லாம் நாங்கள்கண்டு களிகூரலானேம்.

பழையகோவையென்று அறியப்படுகின்ற இந்தஇடம் அர்ச். சவேரியார் காலத்தில் மாபெரும்பட்டணமாய் விளங்கியதென்று சிலர்சொல்லக்கேட்டோம். தற்போது இந்தஇடத்திலிருந்து சிலமைல்தூரத்திலுள்ள புதிய கோவைஎன்னுமிடமே ஓர் புதுநகரமாய்க் காட்சியளிப்பதை அவ்விடம் சென்று கவனித்தோம்.

### S. N. சாமுவேல் — மிருசுவில்

இவ்வாறாய் நாம்அங்குதங்கியிருந்த மூன்று தினங்களையும் ஞானனந்தத்துடன் செலவிட்டபின் 15-ந் திகதி சாயந்தரம் 3 மணியளவில் மோட்டர் யந்திரப்பட்குகளில் நமது மறுபிரயாணத்தைத் தொடக்கி ஆங்கிலத்திலும், தமிழிலும் செபமாலைசெபித்துக்கொண்டும், திவ்வியகீதங்கள் பாடிக்கொண்டும் மர்முகோவையையடைந்து அங்கிருந்து 6 மணியளவில் புகையிரத மூலமாய் மதராஸுக்குப் புறப்படலானேம். செபமாலைஓசை, செபஓசை, சங்கீதஓசைகள்மத்தியில் ஓடிக்கொண்டிருந்த புகையிரதம் 16-ந் திகதி பொழுதுபுலர்ந்ததும் ஓர் புகையிரதஸ்தானத்தில்போய்த் தங்கியது. அவ்விடம்பிளாற்போமில் நிறைவேறிய திவ்வியபூசையின்பின்காலைப்போசனம்முடித்துக்கொண்டு மறுபடியும் பிரயாணத்தைத்தொடக்கிப் 17-ந் திகதி உதயவேளை மதராஸ்புகையிரதஸ்தானத்தை அடைந்துசிறிதுநேரத்துள் முன்போல மூன்றும்சபைக் கன்னியர்மடத்தைச் சேர்ந்தோம்.

அங்கு எங்கள்பெட்டிகள், படுக்கைகள்முதலியவைகளை வைத்துவிட்டுக் காலைப்போசனஞ்செய்துகொண்டு பஸ், திரும்கார் மூலமாயும், கால்நடையாயும் பட்டணத்தின்பலதெருக்களையும் சுற்றிப்பார்த்தோம். மறுநாள் 18-ந் திகதி மோட்டர்ரதம்ஒன்றை வாடைக்குஅமர்த்திக்கொண்டு, நமது ஆண்டவரின் பன்னிருஅப்போஸ்தலருள்ஒருவரான அர்ச். தோமையாரின் புனிதஸ்தலங்களைத் தரிசிக்கச்சென்றோம்.

அவர் வேதபோதகஞ்செய்த இடமென்றுசொல்லப்படும் சின்னமலைக்கு முந்தமுந்தச் சென்று, அங்கேஅவர் நின்றுகொண்டு பிரசங்கஞ்செய்த மலையில்ஏறி அதைத்தரிசித்தோம். அவர் புதுமையாய் உண்டுபண்ணிய நீரூற்றில் தண்ணீர்அள்ளிப் பருகினேம். அவர்நின்றபோது அவருடைய திருப்பாதம்படிந்தகல்லையும், அவர்முழங்கை, முழங்கால்பதிந்த கல்லுகளையும் தரிசித்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## பொதுவர்த்தமானம்

### வலசைவாங்கும் ஜேர்மனியர்

சோவியற்அரசின் ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனியில் நடந்தேறும் அட்டூழியங்களைத் தாங்கவாற்ருது மேற்குஜேர்மனிக்கு ஓடித்தப்புகின்ற ஜேர்மனியர்களின்தொகை அதிகரித்துக்கொண்டுவருவதாலே கிழக்குஜேர்மனியிற் கலக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதற்குக்காரணம் நல்லதொழிலாளர்களை ஆயிரக்கணக்கிலே அது இழந்துகொண்டு வருவதேயாம். சமீபத்திலே மேற்குஜேர்மனிக்கு ஓடித்தப்பியவர்களில் ஐந்திலொருபங்குக்கு மேற்பட்டவர்கள் இருபது வயதுக்குட்பட்டவர்களே. ஆரம்பத்திலே தினமும் 600 பேர் ஓடித்தப்பியவிடத்திலே சென்றவாரம் தினமும் 1,200 முதல் 1,500 பேர்வரையில்ஓடித்தப்பியிருக்கின்றனர்.

### யப்பானும் கம்யூனிஸமும்

கம்யூனிஸத்தைமுன்னிட்டு யப்பான் நடுநிலைமைநாடாக இருந்துவரமாட்டாது; தனது பாதுகாப்புகளை அமைத்துக்கொள்வதற்காக அது படிப்படியாய் ஆயுதபாணியாகிக்கொண்டிருக்கிறது; தங்கள் சொந்தநாட்டைக் கம்யூனிஸ்த படையெடுப்புக்கு விற்றுவிடுவதற்காக நடுநிலைமையாய் இருந்துவரவிரும்புகிறவர்கள் கவனிக்கப்படத்தக்கவர்கள்அல்ல. சுதந்திரநாடுகளின் பக்கமாகநின்று தனது பாதுகாப்புகளை அமைப்பதற்காகத் திரும்பவும் படிப்படியாக ஆயுதபாணியாகிக் கொண்டிருக்கின்ற யப்பான் கம்யூனிஸத்துடன் ஒத்துழைக்கமாட்டாதுஎன்று யப்பானிய பாராளுமன்றத்திலே சென்ற 30-ந் திகதி அதன் வெளிநாட்டு மந்திரியான திரு. காற்சுவோ ஒகாசாகி கூறியிருக்கின்றார். யப்பானின் அத்தியாவசிய கடமைகளில் ஒன்று கூடியமட்டும் தன்னைப்பாதுகாப்பதேயாகும் என்றும் அவர் கூறினின்றார்.

### சோவியற்அரசின் தூதர்கள்

சென்னையில்நடந்தேறிய குடியாசுத்தினவிழாவிற்குத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கம்மிற்றித்தலைவர் திரு. கே. காமராஜ் தலைமைவகித்துப் பேசியவிடத்துக் கூறியதாவது: பலாத்காரத்தின்மூலம் தனது ஏதேச்சாதிகார ஆட்சியைப்பரப்ப ருஷியா முயற்சிசெய்துகொண்டிருக்கிறது; அப்படிப்பட்ட ருஷியாவின் கண்காணிகள் கம்யூனிஸ்தர்களே; இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்தர்கள் ருஷியாவின்லட்சியம் நிறைவேறும்படியாய்த் தீவிரமாக உழைத்துவருகின்றார்கள்; ஆகவே, அவர்கள் நாட்டில்ஏற்படும் எந்தநிலைமையையும் பயன்படுத்திக்கொண்டு மக்களைத்தவருனவழியில் நடத்திவருகிறார்கள்; அரும்பாடுபட்டு மகாத்மாகாந்தி இந்நாட்டில் உண்டுபண்ணின ஐக்கியத்தைக்குலைக்க அவர்கள் முயற்சிசெய்துகொண் டிருக்கிறார்கள்.

### 24 மணி நேரத்தில்

ஓர் பிரித்தானிய "கன்பெரு" ஜெற் வெடிகுண்டு விமானம் லண்டன்நகரிலிருந்து 24 மணித்தியாலத்திலும் குறைந்தநேரத்திலே பறந்துசென்று ஆஸ்திரேலியாவைச்சேர்ந்த டார்வின் நகர்போய்ச்சேர்ந்து பிரசித்திபெற்றிருக்கின்றது. இது லண்டனிலிருந்து சென்ற 27-ந்திகதி செவ்வாய்க்கிழமை புறப்படலாயிற்று. லண்டன்—டார்வின் பிரயாணத்தைமுடிக்க இதற்கு 22 மணித்தியாலம் 8 நிமிஷம் 21·8 செக்கன்பிடித்தது. அதாவது முழுத்தூரத்தையும் மணித்தியாலம் 391·2 மைல் வேகத்தில் பறந்துசென்றுள்ளது. இது லண்டனிலிருந்து காராச்சிவரையிலுள்ள 3,921 மைல் தூரத்தையும் 8 மணித்தியாலம் 52 நிமிஷத்தில், அதாவது மணித்தியாலம் 441 மைல் வேகமாகப் பறந்துசென்றது. இதற்குமுன் அதிகம்குறைந்தநேரமாக லண்டன்—டார்வின் பிரயாணதூரத்தை ஓர் விமானம் 45 மணித்தியாலம் 8 நிமிஷத்தில் பறந்துசென்றது.

## நாஞ சங்கதிகள்

—15 கோடிடலர் பெறுமதியான யுத்ததளபாடங்களைப் பிரித்தானியிலே செய்துகொடுக்குமாறு அமெரிக்கவாசு ஆடர்கள் அனுப்பியிருக்கிறது. வடஅத்திலாந்திக் உடன்படிக்கையிற் சேர்ந்துள்ள நாடுகளுக்கு இந்தயுத்த தளபாடங்களை அமெரிக்கவாசு வாங்கி உபகரிக்கும். பிரித்தானியில் இவைகளைச் செய்வதாலே பிரித்தானிய அரசு தனது டலர்ச்சம்பாத்தியத்தைப்பெருக்க வசதிஏற்பட்டிருக்கிறது.

—நோயாளிகளுக்கு இலவச வைத்தியசிகிச்சைஅளிக்கும் வைத்தியசாலைகள் இருப்பதுபோல் ஐக்கியஅமெரிக்க தேசத்திலே நியாயவாதிகளுக்குப் பணங்கொடுக்கமுடியாத ஏழைகளுக்கும் இலவசமாகச் சட்டசம்பந்தமான ஆலோசனைகூறும் நிலையங்களும் இருந்துவருகின்றன. செல்வருக்கு நியாயம் வழங்கப்படுவதுபோல் ஏழைகளுக்கும் நியாயம்வழங்கப்படுவதற்கு வசதியளிக்க வேண்டுமென்பதே அவற்றின் நோக்கமாகும்.

—லண்டன்நகரிலே பெற்ருேலியம் கம்பெனித் தலைவரும், பாதிப்பக்கம் ஓர்செவிடருமான 40 வயதுடைய திரு. மோறிஸ் தோமஸ் என்பவர் மூக்குக்கண்ணுடியுடன் பொருத்தப்பட்டதாய்ச் செவிடரைக் கேட்கச்செய்யும் நவீனகருவி ஒன்றைக் கண்டுபிடித்திருப்பதாக லண்டனிலிருந்து சென்ற 24-ந்திகதி செய்திகிடைத்துள்ளது. இவர் தமது சொந்தத்தொழிற்சாலையிலே நான்குவருடம்நடத்திய ஆராய்ச்சியின்விளைவாய் இதனைக்கண்டுபிடித்தாராம்.

—யப்பானியமுறையைப் பின்பற்றி இந்தியாவின் சுமார் 2,25,000 கிராமங்களிலே நெற்செய்கைநடத்தும் இயக்கம்ஒன்றை இந்தியஅரசாங்கம் வருகிற பங்குனிமாதம் 15-ந்திகதி தொடக்கவிருக்கின்றது. அதனுல் இந்தியாவின் அரிசிஉற்பத்தியை அடுத்தபோகத்திலே நான்குலட்சம் தொன்னுல்அதிகமாக்கமுடியுமென்று நம்பப்படுவதாக இந்தியகமத்தொழில் மந்திரியார் தெரிவித்திருக்கின்றார்.

—யப்பானிய யொக்கோகாமாநகருக்குச் சமீபமான வசெடாசர்வகலாசாலையைச்சேர்ந்த ஆறுயப்பானியர்களின் கோஷ்டி ஒன்றுசென்ற 30-ந்திகதி தென்னமெரிக்காவிலே அன்டிஸ்மலைத்தொடரிலுள்ள 23,380அடி உயரமான அகொன்காக்குவா எனும் சிகரத்தின் உச்சிக்குமுதன்முதலாக ஏறிச்சென்று வெற்றிபெற்றிருக்கிறது. இதுவே மேல்கோளார்த்தத்தில் மகாஉந்நத சிகரமாகும். புஞெபெசர் சகிஞேஎனும் யப்பானியபோாசிரியரே இக்கோஷ்டிக்குத் தலைமைவகித்தார்.

—தற்போது இந்தியாவிலே எக்கர் ஒன்றுக்கு அரிசிஉற்பத்தி சராசரிவீதமாக 1,500 ருத்தலாகும். ஆனுல், யப்பானியமுறையைக் கையாண்டுநெற்செய்கைநடத்துமிடத்து எக்கர்ஒன்றுக்குச் சராசரிவீதமாய் 6,000 ருத்தலாக அதிகரிக்குமென்று கருதப்படுகிறது. அதனுல் அரிசிஉற்பத்திக்கு யப்பானியமுறையைக் கையாளும்படியாகப் பிரதமர் பண்டிதநேரு இந்தியஅரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றார்.

—1950-ம்ஆண்டு சோவியற் அரசின் ஆதாவிலே சிலேசியா நாட்டுப்பகுதிகள் கிழக்குஜேர்மன் அதிகாரிகளால் போலாந்துக்குக் கையளிக்கப்படலாயின. தற்போது சிலேசியா நாட்டுப்பகுதிகளைப் போலாந்திடமிருந்து திரும்பக் கிழக்குஜேர்மனியிடம் ஒப்படைப்பதற்கான ஓர்உடன்படிக்கையைச் செய்துமுடிப்பதுபற்றிச் சோவியற்அரசு கடுமையாக ஆலோசித்து வருகிறதாம்.

## அர்ச். செபஸ்தியார்திருநாள்

சத்தியவேதத்திற்காகத் தமதுபிராணனைத் தியாகஞ்செய்த வீரர்திலகமாம் அர்ச். செபஸ்தியாரின் மகோற்சவத்தை வழமைப்பிரகாரம் கொண்டாடுமுகமாகக் கடந்த 16-1-53 வெள்ளிக்கிழமை நாக்கலிஆலயத்தில் கொடியேற்றத்துடன் நவதின உற்சவங்கள் ஆரம்பமாகிநடைபெற்றன. பின்னர் உள்ளும்புறமும் உயரியசோடினைகளாலும், மின்சாரதீபங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, ஒலிபெருக்கிவசதியும் செய்யப்பெற்றிருந்த ஆலயத்திலே பல கிராமங்களிலுமிருந்து வந்து கூடிய அறுநூற்றுக்கு அதிகமான பக்தர்கள் மத்தியில், கட்டளைக்குரவர் வண. எஸ். விசுவாசம்சுவாமியார் பன்னிரு சீடர்கள் புடைசூழ 24-1-53 சனிக்கிழமை இரவு 8 மணிக்கு மாலைஆராதனைபாடி, மறுநாள்ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குப் பாடற்பூசை நிறைவேற்றினர். அவர் பூசையின்போது அர்ச். செபஸ்தியாரின் வீரத்தியாகங்களைப்பற்றி நிகழ்த்தியபிரசங்கம் வெகு கவர்ச்சிகரமானது. பூசையின் பின் திருச்சுரூபம் சிங்காரத்தேரில் பவனிகொண்டுசெல்லப்பட்டு ஆலயத்துட்பிரவேசித்ததும் சுவாமியார் திருச்சுரூபத்தைக் காத்தேந்திஆசீர்வாதமளித்தார். ஈற்றில் ஊர்வாசிகள்ஒன்றுகூடி உபசாணைப் பொருட்களுடன் குருமனைசென்று சுவாமியாரைச்சந்தித்து அவரதுஆசிபெற்றதும் திருநாள்சுபமே முடிவுற்றது.

"நவசிபி"

## சென்மேரிஸ் சனசமூக நிலையம்

நாவாந்துறை சென்மேரிஸ் சனசமூக நிலையத்தின் 4-ம்வருடாந்த நிறைவு விழா சென்ற 28-ந்திகதி புதன்கிழமை காலை 10 மணியளவில் ஆரம்பமானது. தலஸ்தாபன அமைச்சர் சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா அவர்களைக் காஜி வி. எம். எம். அபூசாலி, எம். எம். சி. அவர்கள் வரவேற்க, நாதசுரவாத்திய சகிதமாய்ச் சகலரும் ஊர்வலமாக அழைத்துவந்து நிலையத்தின் அலங்கார மண்டபத்தில் மலர்மாலை அணிவித்து உயர்ஆசனத்தமரச் செய்தார்கள். இராசவாசல் முதலியார் சி. தியாகராசா அவர்கள் தலைமையில் காரியதரிசி படித்துக்கொடுத்த வரவேற்புப் பத்திரத்தில் கேட்டுக்கொண்டதற்கு அமைச்சர் அவர்கள் அளித்தபதிலிலே அரசியற் தலைவர்கள் சம்பிரமமான குபேரவாழ்க்கை நடாத்தியடையும் இன்பத்திலும்பார்க்கச் சாதாரணமக்கள் சுகாதார இல்லங்களில் சுகமுடன் வாழக் காண்பதே சுதந்திரஇலங்கையின் சுபீட்சமென எடுத்துக்காட்டி, பண்டு கல்விஅமைச்சராய் இருந்த ஞான்று இலவசக்கல்விக்கு வழிபண்ணினேன்; இன்று தலஸ்தாபன அமைச்சராகியபின் சேரியைநிகர்த்த நாவாந்துறையின் நலிவுதீர்க்குமாறு இலவச இல்லங்கொடுக்க என்னுலானவை செய்வேனெனக்கூறிச் சென்மேரிஸ் சனசமூகநிலையப் பாதுகாவலர் வண. வி. ஆர். தார்சீசியஸ் சுவாமியவர்களின் குருத்துவ வெண்பொன்யூபிலி ஞாபகார்த்தமாகக் கட்டியெழுப்பவிருக்கும் தார்சீசியஸ்மகால் என்னும் வாசிகசாலை மூலைக்கல்லை சுவாமியவர்கள் மந்திரிக்க, அமைச்சர்நாட்டியருளினர். நிலையத்தின் 4-ம்வருடநிறைவு விழா காஜி வி. எம். எம். அபூசாலி அவர்கள் தலைமையில் செபத்துடன் ஆரம்பமானது. காரியதரிசியால் வருடாந்த அறிக்கையும், வரவுசெலவும் வாசிக்கப்பட்டுச் சபையோர் குறிப்புரை, தீர்மானங்கள், தலைவர்பேருரை, நன்றி கூறுதல், நிறைவு செபத்துடன் விழா இனிதுநிறைவெய்தியது. நிலையத்தின் தலைவரும், இயற்கைப்புலவருமான திரு. கி. சூசைப்பிள்ளை அவர்களை வரவேற்று, மலர்மாலையணிந்து வாழ்த்துப்பா படித்துவழங்கி, பட்டுப்போர்த்துப் பரிசில்சமர்ப்பித்துப் புனைந்துரைத்துப் பாராட்டி ஊர்வலமாய் அவர் மனைபுகவே பரிமளிப்பான விருந்தோபசாரத்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

— நிருபர்

## தேவாமுதமும் அல்லது ஞானவாசிப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றும் பிரயாசையாய்த் தோன்றுது. யேசுநாதர் நம்முடன் இராதபோதோ, எல்லாம் கஷ்டமாயிருக்கிறது. யேசுநாதர் நமது உள்ளத்திற் சம்பாஷியாதபோது, நமக்குண்டாகும் ஆறுதல் இனிமையற்றதே. யேசுநாதர் ஒரு வார்த்தைமாத்திரம் திருவுளம்பற்றினுலோ நம்ஆத்துமத்திற்கு வெகுமதுரமான ஆறுதலாகின்றது. "சுவாமி வந்திருக்கிறார், உன்னைஅழைக்கிறார்" (அரு. 11 : 28) என்று மார்த்தாள் தனக்கு அறிவித்தபோது, மரியமதலேனுள் தான் அழுதுகொண்டிருந்த இடத்தைவிட்டு உடனேஎழுந்து வரவில்லையோ? நாம்படும் மனத்துன்பத்தை ஒழித்து மனச்சந்தோஷத்திற்கு யேசுநாதர் அழைக்கிறநேரம் பாக்கியமான நேரம். யேசுநாதர் இல்லாமல் எவ்வளவு உன்மனம்வற்றிக் கன்னெஞ்சமாயிருக்கிறது. யேசுநாதரைத்தவிர நீ வேறெதையாவது விரும்பினுல், எவ்வளவு புத்தியீனனும், வீணனுமாயிருப்பாய்; அதனுலே பூலோகமெல்லாத்தையும் இழந்துபோவதைவிட உனக்கு அதிககனமான நஷ்டமாகுமல்லவா?

(தொடரும்)

—நிகழும் 1953-ம் ஆண்டிலே பிரான்சின் தேசியபாதுகாப்புக்கெனச் செலவிடப்படுமாறு பிரான்சியபாராளுமன்றம் சென்றவாரத்தில் 1 கோடியே 42 லட்சகோடி பிராங்குகள் அனுமதித்திருக்கிறது. இதற்குச்சார்பாக அப்பாராளுமன்ற அங்கத்தவர்களில் 517 பேரும, கம்யூனிஸ்த அங்கத்தவர்கள் 100 பேருமே மாருகவும் வாக்களித்தார்கள்.

### கம்யூனிஸ்த தலைவர்கள்

ருஷியாவின் தோழநாடுகளிலே அதற்குப்பெரிதும் உவப்பானவை போலாந்தும், செக்கோசிலவாகியாவுமே. ஆனுல், ருஷியா அவற்றில் கொண்டிருந்தஉவப்பு 1948-ம் ஆண்டுக்குப் பின் மாறத்தொடங்கியது. அவைகளிலும் படைவலிமையிற்சிறந்த ஜேர்மனியை அதுகூடியவீதமாகக் கவனிக்கஆரம்பித்தது. ஆனுல், செக்கோசிலவாகிய, போலாந்தமக்களுக்கு இதுபிடிக்கமாட்டாதென்பது அதற்குத்தெரியும். ஆகவே, பழையதலைவர்களை ஒழித்துக்கட்டவேண்டிய அவசியம் ஏற்படலாயிற்று. செக்நாட்டுமக்கள் அப்போது ஜேர்மனியரை வெறுத்தார்கள். சோவியற்அரசும் ஜேர்மனியரின் எதிரியே என்று சொல்லி அப்போது செக்நாட்டை ருஷியர்களுக்குக் காட்டிக்கொடுத்த அந்நாட்டுக் கம்யூனிஸ் ததலைவர்கள் இன்றுவேண்டப்படாத துரோகிகளாகிவிட்டார்கள். அப்படியானவர்களைக் கொன்றெழிப்பதும், சிறையில் அடைப்பதுமே சோவியற் அரசு கண்டமுறையாகும். அதனுல் செக்நாட்டுப் பழையகம்யூனிஸ்தர்கள் சமீபத்திலே இக்கதிக்குள்ளானமை அதிசயமன்று.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 5-1953